Registered as a Newspaper

பக்கங்கள் – 32

விலை – ரூபா 60

# உதயன்


சுடர் : 39 கதிர் : 280

ஞாயிற்றுக்கிழமை 01 செப்ரெம்பர் 2024

ஆவணி 16 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055



"கருணைக்கடல் அழகன் முருகன்"
வரலாற்று சிறப்பும் தமிழ் பாரம்பரியமும் கொண்ட நல்லூர் கந்தனாக இன்று தேரேறி அருள் பாலிக்க வருகின்றார்! இன்னலுறும் மக்கள் குறைதீர்த்து எல்லோர் வாழ்விலும் வளமும் நலமும் நிலைத்திட வரமருள்வாயே எம் பெருமானே! ஒட்டுமொத்த இலங்கையர் பண்பாட்டின் அடையாளமாக ஆன்மீக விழுமியமாக விளங்கும் நலமருளும் நல்லூரானே! உன்னருளால் நல்லாட்சி அமைந்திட உன்தாள் பிரார்த்திக்றேன்.



இன்று தேரேறும்
நல்லூர்க்கந்தனின் அருளால்

மக்களுக்கு நல்லாட்சிக்கான
வெற்றி கிடைப்பதாகுக!

CR/43134

அனைவருக்கும் வெற்றி
உங்கள் சஜித்

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சந்தி முரளி



"அப்ப உவர்
அலி சப்ரி இன்னும்
திருந்தேலைப்
பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 32
விலை – ரூபா 60


# உதயன்

சுடர் : 39
கதிர் : 280

ஞாயிற்றுக்கிழமை
01 செப்ரெம்பர் 2024

ஆவணி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# அதிகபட்ச அதிகாரங்கள் தமிழருக்குப் பகிரப்படும்!



## யாழ்ப்பாணத்தில் வைத்து சஜித் தெரிவிப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 1**

**இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரங்களை தமிழர்களுக்குப் பகிர்ந்தளித்து, அவர்களை அரசியல் ரீதியில் பலமடைய வைக்க நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் தெரிவித்துள்ளார்.**

30

## முறைப்பாடுகள் 1,500+

கொழும்பு, செப். 1
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ

30



ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, நல்லூர் முருகன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார். அத்துடன் மதத் தலைவர்களையும் அவர் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (அ-ம)

## எரிபொருள்கள் விலைக்குறைப்பு

### பெற்றோல் இனி ரூ.332

கொழும்பு, செப். 1
நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி பெற்றோலின் புதிய விலையாக 332 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பெற்றோல் 92 ஒக்ரேன் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அதன் புதிய விலையாக 332 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

30

## வடக்கு, தெற்கு இளைஞருக்கு ஒரேமாதிரியான பிரச்சினை!

வடக்கு, தெற்கு இளைஞர்களுக்கு ஒரேமாதிரியான பிரச்சினைகளே காணப்படுகின்றன என்று ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விரிவு: பக்கம் - 8

காணாமற்போனோர் விவகாரம்;

## சர்வதேசத் தரவு வெற்றுக்குப்பை!

### 6,047 முறைப்பாடே உண்டு அமைச்சர் அலிசப்ரி காட்டம்



கொழும்பு, செப். 1
இலங்கையில், காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேசத்தால் வழங்கப்படும் தரவுகள் வெற்றுக் குப்பையே என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே, அமைச்சர் அலி சப்ரி


30

## சஞ்சீவி

## வெளிவிவகார அமைச்சர் தவறாக வழிநடத்துகின்றார்!

கொழும்பு, செப். 1
இலங்கையில் இறுதிப்போரின்போதும் அதற்கு அண்மித்ததாகவும், காணாமற்போனோர் தொடர்பில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள தகவல்கள் தவறாக வழிநடத்த முயற்சிக்கும் நடவடிக்கையாகும் என்று சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கை குறித்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

30



கோப்புப்படம்

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செப். 1
'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

30

## தண்டனை விலக்களிப்பு துன்பத்தை அதிகரிக்கும்

### ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 1
வலிந்து காணாமலாக்கப்படல்களால் தோற்றுவிக்கப்படும் பாதுகாப்பற்ற உணர்வு அவர்கள் சார்ந்த ஒட்டுமொத்த சமூகத்தையும் கூட்டாகப் பாதிக்கும். இதற்குக் காரணமானவர்கள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு பாதிக்கப்பட்ட தரப்பினரின் துன்பத்தையும், ஆற்றாமையையும் மேலும் அதிகரிக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரெஞ்ச் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேசம் உலகளாவிய பிரஜை



இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய பல்வேறு இனத்தவர்களும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய பல்வேறு சமயத்தவர்களும் வாழ்கின்ற நாடாகும். இந்த பன்மைத்துவத்தின் காரணமாக இயல்பாகவே நிலவுகின்ற பல் கலாசாரத்தினுள் ஒவ்வொருவருடைய இருப்பினை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் அவற்றுக்கு மதிப்பளித்து வாழ்வது நாட்டின் நலனுக்கும் சமூக ஒற்றுமைக்கும் அத்தியாவசியமானதாகும். எனினும் வரலாற்றில் அதற்காக எமக்கு கிடைத்த பல்வேறான அரிய பல சந்தர்ப்பங்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் தோல்விகண்டுள்ளோம். அதிகாரத்தைக் கைப்பற்றும் மற்றும் அதனை தக்கவைத்துக்கொள்ளும் குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்கங்களின் காரணமாக இனத்துவ மற்றும் சமயரீதியாக மக்களுக்கிடையில் பரஸ்பர சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியதன் விளைவாக 30 வருடகால கொடூரயுத்தித்திற்கு நாம் முகம்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். அந்த யுத்தத்தின் வடுக்களும் வேதனைமிகுந்த விளைவுகளும் தற்பொழுதும் இலங்கைச் சமூகத்தினுள் எச்சங்களாக மிஞ்சியிருக்கின்றன. எனவே, இனம், மொழி, மதம், சாதி, பால்நிலை என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாத மேற்குறித்த பன்மைத்துவ அடையாளங்களை மதிக்கின்ற மற்றும் அவற்றின் இருப்பினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்ற இலங்கை எனும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய ஒற்றுமையை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

## கோட்பாடுகள்

- சகல இனத்தவர்களினதும் அரசியல் பங்பேற்பு
- இனம், மொழி, மதம், சாதி அல்லது பால்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு பிரஜையும் / மக்கட் சமூகமும் அவமதிப்பிற்கோ, துன்புறுத்தலுக்கோ, அழுத்தத்திற்கோ அல்லது அநீதிக்கோ ஆளாகாதிருத்தல்.
- சகல இனத்தவர்களினதும் மற்றும் சமயக் குழுக்களினதும் பாதுகாப்பு மற்றும் பரஸ்ப புரிதல், நம்பிக்கை மற்றும் உரிமைகள்.
- இனவாத, சாதிஅடிப்படையில் மற்றும் மதவாதக் கருத்துக்களின் அடிப்படையில் பிரிக்கப்படாத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்த இலங்கை தேசத்தவர்.

## செயற்பாடுகள்

- 2015-2019 புதிய அரசிலமைப்பொன்றினை தயாரிப்பதற்காக கடைப்பிடித்த செயற்பாங்கினை துரிதமாக நிறைவு செய்து சமத்தவம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசியலமைப் பொன்றினை தயாரித்தல்.
- ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களையும் ஆட்சியில் தொடர்புபடுத்தக்கூடியவாறு ஒவ்வொர் உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை உறுதிசெய்தல்.
- தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்று உள்ளூார் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்திற்குள் நடாத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்ட பாரபட்சத்திற்கு எதிரான ஆணைக்குழு ஒன்றினைத் (Commission Against Discrimination) தாபித்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மெசியல் படுகொலைகள், காணாமல்போகச் செய்வித்தல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றி புலன்விசாரணை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுதல்.
- இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டினை விரிவாக்குதல்.
- மதங்களுக்கிடையிலான மோதல்களை தீர்த்துவைப்பதற்கான அனைத்து மதத் தலைவர்களையும் மதம்சார்ந்த கல்விமான்களினதும் உள்ளடக்கத்துடனான சர்வ மதப் பேரவை ஒன்றைத் தாபித்தல்.
- உலக மதங்கள் பற்றிய சமநிலை வாய்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
- தேசிய மற்றும் மத ஐக்கியத்திற்கான கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.
- அரசியல் கைதிகளை விடுதலை செய்தலும் அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துதல்
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உள்ளிட்ட அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்த மக்களினதும் சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தினை முறைமைப்படுத்துதல்.
- கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அரசியல் அழுத்தங்களின்றி சகல இனத்தவர்களுக்கும் நியாயமானவகையில் கிடைக்கக் கூடியதாக தகைமைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதனை உறுதிசெய்தல்.
- மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் யுத்த-விதவைகள், அனாதைகள் மற்றும் மனஅழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மானிய உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு ஒன்றினூடாக நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்.
- இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.
- அரசியலமைப்பின் 16ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்துதல்.
- அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுலாக்குதல்.
- தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச அலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.
- 2023. 10. 15 ஆந் திகதி கொண்டதாக தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹற்றன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையகத் தமிழ் மக்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மலையகத் தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்று வகையில் அதிகரித்தல், மக்கள் கௌரவமான வருமானத்தினைப் பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.
- வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாக தீர்த்து, அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்குதல்.

**வளமான நாடு - அழகான வாழ்க்கை**

අනුර කුමාර දිසානායක
அநுர குமார திசாநாயக்க
Anura Kumara Dissanayake


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாகாணமட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற அனலை தீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவர்கள் அதிபர் புஷ்பகாந்தன் தலைமையில் வித்தியாலய மண்ட பத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கௌரவிக்கப்பட் டனர். (ச-45-9)




# சுழிபுரம் சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட்டில் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.1
சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழ கத்தின் ஏற்பாட்டில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிறிமியர் மென்பந்தாட்ட லீக்கின் இறுதிப்போட்டியில் சுழிபுரம் சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி வாகை சூடியது .
கலைமகள் விளையாட்டுக் கழகத்தினரிடையே சுழிபுரம் சூப்பர் கிங்ஸ் மற்றும் சுழிபுரம் சூப்பர் லயன்ஸ் என இரு அணிகள் பிரிக்கப்பட்டு குறித்த மென்பந்தாட்டப் போட்டி 5 சுற்றுத் தொடர் களாக நடத்தப்பட்டன.
இந்நிலையில் சுழிபுரம் சூப்பர் கிங்ஸ் அணி ஐந்து சுற்றுத் தொடர்களில் 3 தொடர்களை கைப்பற்றி வெற்றியைத் தனதாக்கியது. (ச-25, 125)

# குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப்.1
இணுவிலைச் சேர்ந்த செ.ரிசாந், ச.யதுசன், கி.சிந்துஜன், யோ.சதீஸ், ஆ.சயந்தன் ஆகி யோரின் நினைவாக பாலாவோடை இளைஞர் களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இணுவில் அறிவாலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்து வக் கற்கைகள் வணிகபீட ஓய்வுநிலைப் பீடாதி பதி பேராசிரியர் க.தேவராஜா, இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன்விருத்தி மைய அதி பர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகி யோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட னர். (ச-25,66)






ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வராணி சோமசேக ரம்பிள்ளையை அவரது சமய, சமூகப் பணிக் காகப் பாராட்டி வாழ்த்துவதற்கு அவரது மாண வர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'வாழும் போதே வாழ்த்துவோம்' நிகழ்வு கிளிநொச்சி கூட்டுற வாளர் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-22,13)

55ஆவது படைப்பிரிவின் இராணு வத்தின் 12 இலட்சம் ரூபா நிதிப்பங் களிப்பில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை கிராம அலுவலர் பிரி வில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பமொன்றுக்கு நிரந்தரமான வீடு அமைத்து கையளிக்கப்பட்டுள் ளது. (ச-113)





கிளிநொச்சி மாவட்ட ஆவணி மாதத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன், சட்டவிரோத செயற்பாடு களைக் கட்டுப்படுத்த விசேட திட்டங்களை வகுத்தல் தொடர்பாக வும் கலந்துரையாடப்பட்டது. (ச-25,27)




# கலந்துரையாடல்

பளை, செப்.1
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவி லுள்ள கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான சுழற்சி முறை கடன் வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலர் தலைமை யில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்றது. (ரி-9)



உசன் இராமநாதன் மகா வித்தியாலய பழைய மாணவர் மருத்துவ கலாநிதி வே. பரமநாதனின் நிதியனுசரணையில் உசன் பவுண்டேசன் ஊடாக போட்டோப் பிரதி இயந் திரம் வித்தியாலய அதிபரிடம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செப்.1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தேவார இசைமணி எஸ் சண்முகராஜா பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், மாலை நல்லூர் இந்து மாணவர் சேவாலய பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஒ-ரி)



**பரி வாகனத்தில் நல்லூரான்!**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந் திருவிழாவின் 22 ஆம் நாள் மாலை உற்சவமான ஒருமுகத் திருவிழாவில் நல்லூரான் மாலை 6 மணிக்கு பரி வாகனத்தில் எழுந்தருளினார். (ஒ-45-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** நீங்கள் ஈடுபடும் செயல்களில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். கவனமாகச் செயற்படவேண்டிய நாள். சொத்து விவகாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பீர்யோகமான நாள்.

**இடபம்:** வரவால் வளம் காணும் நாள். குடும்பக் கழப்பம் நீங்கும். இழுபறியாக இருந்த செயல் நிறைவேறும். போராடி வெற்றிபெற வேண்டிய நாள். வியாபாரத்தில் ஏற்பட்ட சிக்கல்களை சரிசெய்வீர். முன்னேற்றமான நாள்.

**மிதுனம்:** திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள். செயல்களில் இருந்த தடை நீங்கும். எதிர்பார்த்த வருமானம் வரும். முதலில் தெளிவு உண்டாகும். தெய்வ வழிபாட்டால் ஏற்றம் அடையும் நாள். தொழிலில் நீங்கள் எதிர்பார்த்த லாபம் வரும்.

**கடகம்:** அலைச்சலுக்கு ஆளாகும் நாள். எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும். விருப்பம் நிறைவேறும் நாள். உங்கள் பேச்சாற்றலால் இழுபறியாக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள்.

**சிம்மம்:** இலாபமான நாள். எதிர்பார்த்த வரவு வரும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். முயற்சியில் முன்னேற்றம் தோன்றும். நிதானமாக செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தை மாற்றம் செய்வது குறித்து யோசிப்பீர்.

**கன்னி:** முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். எதிர்பார்த்த வரவு வரும். அனுசரித்துச் சென்று இலாபம் காண வேண்டிய நாள். பொருளாதார நெருக்கடி விலகும்.

**துலாம்:** உழைப்பால் உயர்வு காணும் நாள். குழப்பங்களில் இருந்து விடுபடுவீர். புதிய முயற்சியில் ஈடுபடுவீர். விருப்பம் நிறைவேறும் நாள். வியாபாரத்தில் தொல்லை கொடுத்தவர் விலகிச் செல்வர். விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தெளிவுடன் செயற்பட வேண்டிய நாள். பணிபுரியும் இடத்தில் வேலைபளு அதிகரிக்கும். உங்கள் செயல் நிறைவேறும். சங்கடம் விலகும் நாள். மனதில் ஏற்பட்ட குழப்பம் விலகும்.

**தனுசு:** நன்மையான நாள். உங்கள் செயல்களில் இலாபம் காண்பீர். முயற்சி வெற்றியாகும். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். அமைதி காக்க வேண்டிய நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் தடையும் தாமதமும் உண்டாகும்.

**மகரம்:** சாதகமான நாள். மறைமுகமாக தொல்லை கொடுத்தவர் விலகிச் செல்வர். உங்கள் முயற்சி வெற்றியாகும். உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நாள். வேலையின் காரணமாக உடல்நிலை சோர்வடையும்.

**கும்பம்:** நினைப்பது நிறைவேறும் நாள். உடல்நிலை சீராகும். செயல்களை திட்டமிட்டு செய்து முடிப்பீர். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும்.சதயம்: விருப்பம் நிறைவேறும் நாள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். அலைச்சல் அதிகரிக்கும். உடல்நிலையில் சோர்வு ஏற்படும். புதிய முயற்சியை ஒத்தி வைப்பது நல்லது. மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும்.

# சித்திரப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை அஞ்சல் திணைக்களம் இணைந்து தீபாவளி தபால் முத்திரை சித்திரப்போட்டியை நடத்தவுள்ளது.

போட்டியில் பாலர் மற்றும் கீழ்ப் பிரிவின் வயதெல்லை பத்தாகவும், "தித்திக்கும் தீபாவளித் திருநாள்" எனும் விடயத்தலைப்பிலும், மத்திய மற்றும் மேற்பிரிவின் வயதெல்லை பதினொன்று தொடக்கம் பதினைந்தாகவும், "தீபாவளித் திருநாளில் வாழ்வில் ஒளியேற்றுவோம்" எனும் விடயத்தலைப்பிலும், இளைஞர் பிரிவின் வயதெல்லை பதினாறு தொடக்கம் பத்தொன்பதாகவும் " தீபாவளித் திருநாள் தரும் ஒளிமயமான எதிர்காலம்" எனும் விடயத்தலைப்பிலும் இடம்பெறவுள்ளது.

போட்டிக்கான அறிவுறுத்தல்களாக ஏ-4தாளில்கிடைப்பக்கமாக, படத்தினைச் சுற்றிவர அரை அங்குலம் இடைவெளி விட்டு, கலர்ப் பென்சில் தவிர்ந்த ஏனைய வர்ணங்களைப் பயன்படுத்தி வரைதல் வேண்டும் எனவும், வரைதல் தாளின் பின் பக்கத்தில் முழுப்பெயர், பிறந்த திகதி, முகவரி ஆகிய விடயங்கள் ஆங்கிலப் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டு, தொலைபேசி இலக்கமும் இடவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது அறநெறிப் பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர் சிபாரிசுடன் "தலைவர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 180, 4 ஆம் மாடி, ரி.வி.ஜயா மாவத்த, கொழும்பு 10 " எனும் முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-45)

# நல்லூர்த் திருவிழாவின் 24ஆம் நாள் நிகழ்வுகள்


யாழ்ப்பாணம், செப்.1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

24ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நயினாதீவு நாகபூசஷணி அம்மன் கோவில் ஆதீனகுரு சிவஸ்ரீ. கைலாசநாத வாமதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட செயலக பதில் மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன், சிறப்பு அதிதியாக யாழ். வடக்கு வலயப் பிரதிப் பதிவாளர் நாயகம் கணபதிப்பிள்ளை நடராஜா, கௌரவ அதிதியாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா மற்றும் யாழ். செட்டித்தெரு மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலய அதிபர் கந்தசாமி சசிகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக எ.ஜி.எஸ்.சுவாமிநாதசர்மா இசை அர்ச்சனை அக்கடமி குழுவினர் வழங்கும் " கர்நாடக இசை" நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஒ-ரி)



# வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 1

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் ஆன்மீக அருளுரை ஆற்றினார். (ஒ-25,66)

# வருடாந்த ஒன்றுகூடல்

முல்லைத்தீவு, செப்.1

முல்லைத்தீவு அமுதம் கல்வித்திட்ட வருடாந்த ஒன்றுகூடல் சுவிட்சர் ஸாந்து தாயக ஏர் நிலம் தொண்டமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு இந்துபுரம்,திருமுறிகண்டி, பவுல் முன்பள்ளி மண்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட ஏர்நிலம் செயலாற்றுநர் கவிஞர் யே.லக்சிதரன் தலைமையுரையினை நிகழ்த்தவுள்ளார். (ஒ-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழரசின் முடிவு என்ன?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று நடைபெற இருக்கின்றது. கடந்த மத்திய குழுக் கூட்டத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் கட்சி முடிவு எடுக்கும் என்பதைச் சொல்லியிருந்தார். இப்போது 3 பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் அறிக்கைகளும் வெளிவந்து விட்டன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்புத் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. ஜனாதிபதி ரணில், அதை அடுத்த நாடாளுமன்றம் பார்த்துக்கொள்ளும் என நழுவியிருக்கின்றார். தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் முறைமை உருவாக்கப்படும் என உறுதியளித்திருக்கின்றார். நிறைவேற்றதிகாரத்தை இல்லாதொழிப்போம் என வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகளில் மைத்திரிபாலவே ஓரளவுக்கேனும் அதை நடைமுறைப்படுத்தியிருந்தார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் ஜனாதிபதி ரணிலோ, 13 மைனஸ் என்ற நிலைப்பாட்டையே தேர்தல் அறிக்கையில் முன்வைத்திருக்கின்றார். அதைவிட மத்திய அரசாங்கத்தால் மாகாணத்திடமிருந்து பிடுங்கப்பட்ட அதிகாரங்கள் மீளக் கையளிக்கப்படும் என்று கூறியிருந்தாலும் அவை மீளப் பறிக்கப்படாது என்பதற்கான உத்தரவாதங்கள் எவற்றையும் அவர் வழங்கவில்லை. அதைப்போன்று பொலிஸ் அதிகாரம் தொடர்பில் புதிய நாடாளுமன்றம்முடிவெடுக்கும்எனதனது பொறுப்பிலிருந்து தப்பித்திருக்கின்றார். இவற்றுக்கு அப்பால் அவர் இரண்டரை ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தும் இவற்றைச் செய்வேன் செய்வேன் என்று சொல்லி காலத்தைக் கடத்தினாரே தவிர, அவற்றில் எதையும் செய்து தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை.


எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தோ, புதிய அரசமைப்பு உருவாகும் வரையில் 13ஆவது முழுமையாக நடைமுறையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் 'ஜனாதிபதியின் தற்துணிவால்' மீளப்பெறப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். இங்கேதான் அவரது சொல்லாடல் கவனிக்க வேண்டியதாகின்றது. வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்படாது என்பது சமஷ்டியின் பண்பியல்பு. ஆனால் சஜித்தோ, அது ஜனாதிபதியின் தற்துணிவினால் மாத்திரமே மீளப்பெறப்படமாட்டாது என்று குறிப்பிட்டுள்ளதன் ஊடாக, நாடாளுமன்றத்தால் அவை மீளப்பெறப்படக் கூடும் என்பதை இலைமறை காயாக உட்புகுத்தியிருக்கின்றார். அதைவிட புதிய அரசமைப்பிலும் ஒற்றையாட்சி பேணப்படும் (தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள்) என்பதையும் 13ஆவது திருத்தத்துக்கு அமைவான நாடாளுமன்ற ஆட்சி முறை உருவாக்கப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரவின் தேர்தல் அறிக்கையில், நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பின் எஞ்சிய பணிகள் முடிவுறுத்தப்பட்டு கருத்துக்கணிப்புடன் அது நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கின்றார். நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பை அரசாங்கத்துடன் சேர்ந்து உருவாக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அந்தப் புதிய அரசமைப்பு சமஷ்டி என்று சொல்லாவிட்டாலும் சமஷ்டியின் பண்பியல்புடன் இருப்பதாக, அதை உருவாக்கியவர்களுள் ஒருவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார்.

தமிழர்களுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அடியோடு நீக்குவதாக அநுர மட்டும் உறுதியளித்திருக்கின்றார். சஜித் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் வரும் என்றிருக்கின்றார். ரணில் அதைப் பற்றியே பேசவில்லை. கடந்த காலங்களில் நடந்த படுகொலைகள், பலவந்த காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படும். ஆனால் குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று அநுர சொல்கிறார். ரணிலோ, சஜித்தோ அது தொடர்பில் வாயே திறக்கவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, மூவரின் தேர்தல் அறிக்கையை சம தராசில் வைத்து ஆராயுமா? அல்லது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை (?) நோக்கி இவற்றை வியாக்கியானம் செய்யுமா? அல்லது 'மக்கள் தாம் சிந்தித்து சரியானவருக்கு வாக்களியுங்கள்' என்று நழுவல் போக்கைக் கைக்கொள்ளுமா?

பந்து இப்போது தமிழரசுக்கட்சியிடம்.



## நல்லூரில் இன்றும் நாளையும்

# இடர்தணிப்பு நடைமுறைக்கு மாவட்டச்செயலகம் பரிந்துரை

யாழ்ப்பாணம், செப்.1

**நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசேட திருவிழா தினங்களான இன்றும் நாளையும் இடர் முன்னாயத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு யாழ். மாவட்டச் செயலகம் யாழ். மாநகரசபைக்கு பரிந்துரைத்துள்ளது.**

யாழ். மாநகரசபையின் கோரிக்கைக்கு அமைவாக, யாழ். மாவட்டச் செயலக இடர்முகாமைத்துவத் திணைக்களத்தின் களப்பயண ஆய்வுக்கு அமைவாக இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி கோயில் வீதி, பருத்தித்துறை வீதியிலிருந்து கைலாச பிள்ளையார் கோயில்வரையுள்ள கோயில் வீதியை கோயிலிலிருந்து மக்கள் வெளிச்செல்கின்ற ஒருவழிப் பாதையாக மட்டும் பயன்படுத்தல்வேண்டும். இவ்வாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவசர வெளியேற்று பாதையாக இந்தப் பாதையைப் பயன்படுத்தமுடியும். இதனால் அவசர தேவைகருதி வெளியேற்றப்பட வேண்டியவர்களை வெளியேற்றுவது இலகுவானதாகக் காணப்படும்.

அத்துடன் ஆலயத்தின் பின்புறமாக ஒருவர் மட்டும் செல்லக்கூடியதாக மூடப்பட்டுள்ள பருத்தித்துறை வீதியை குறித்த தினங்களில் முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்து விடுவதன் மூலம் மக்கள் நெருக்கடிகளை குறைத்துக் கொள்ள முடியும் என்றும் யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச-27)

# வேட்பாளர்கள் மாயம் நாம் என்ன செய்வது?

## தேர்தல்கள் ஆணைக்குழு கேள்வி

கொழும்பு, செப். 1

ஜனாதிபதி வேட்பாளர்கள் காணாமல் போனால் பொலிஸில் முறைப்பாடு செய்யலாம். தேர்தல் திணைக்களத்துக்கும் வேட்பாளர்கள் காணாமல் போவதற்கும் எதுவித சம்பந்தமுமில்லை என தேர்தல் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனப் பணிப்பாளர், ஜனாதிபதி வேட்பாளர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை, அவர்களைப்பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே ஆணையாளர் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வேட்பாளர்கள் கூட்டங்களை நடத்த விட்டால் அது அவர்களது பிரச்சினை. அது எங்களுடைய வேலை அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-6)

# சிறையில் அதிகரித்த பட்டதாரிகள்

கொழும்பு, செப். 1

சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 331 பட்டதாரிகள் இருப்பதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரல தெரிவித்துள்ளார். இவர்களில் 66 பேர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்பதுடன், 256 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-இ)

# கடவுச்சீட்டு வரிசைக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு, செப்.1

குடிவரவு - குடியகல்வு திணைக்கள வளாகத்தில் பல நாட்களாகக் காணப்பட்ட நெரிசல் நேற்று முன்தினம் நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒரு நாளைக்கு ஆயிரம் அனுமதிச் சீட்டுகளை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ள காரணத்தால் கடவுச்சீட்டுக்கான வரிசை குறைந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை ஒக்ரோபர் மாதம், புதிய இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம்செய்யப்படும் என்று குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## நாளை

02.09.2024

திங்கட்கிழமை - ஆவணி - 17

சுபநேரம் : 12.05 - 01.35

ராகுகாலம் : 07.35 - 09.05

## நாளொரு நல்வார்த்தை

**அப்பாவித்தனமாக இருப்பது மனதுக்கு மட்டுமே நல்லது. மூளைக்கு அது நல்லதல்ல.**

- அனடோல் பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - தெற்கு இளையோருக்கு ஒரே விதமான பிரச்சினையே!

நாமலின் கண்டுபிடிப்பு



**கொழும்பு, செப். 1**
**வடக்கு இளைஞர்களுக்கும், தெற்கு இளைஞர்களுக்கும் ஒரே வகையான பிரச்சினைகளே உள்ளன. எனவே, சரியான முடிவை எடுத்தால் அவை நிச்சயம் தீரும். வடக்கு அரசியல்வாதிகளுக் காக அன்றி மக்களுக்காகவே எமது முடிவுகள் அமையும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

பியகமப் பகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தேர்தல் பரப்பு ரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர் பில் ஏனைய வேட்பாளர்கள் சமா ளிப்புப் பாணியில் கருத்துகளை முன்வைத்துவரும் நிலையில், மக்களைச் சமாளிக்கும் வகையில் நீங்கள் ஏன் கருத்துகளை வெளி யிடுவதில்லை என தமிழ் ஊடக வியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார். வாக்குகளுக்காக ஏன் பொய்கூற வேண்டும்? முடியாது என்றால் முடியாதுதான் என நான் பதிலளித்தேன்.

வடக்கு, தெற்கு என்பது பிரச்சினை அல்ல. தற்போதைய இளைஞர் கள் புதிய தலைமுறையினர். அவர் கள் வெளிப்படைத்தன்மையை எதிர்பார்க்கின்றனர். தெற்கில் இளைஞர்களுக்குள்ள வேலை யின்மை பிரச்சினைதான் வடக்கு இளைஞர்களுக்கும் காணப்படு கின்றது. தெற்கு இளைஞர்க ளுக்கு கல்வியில் உள்ள பிரச்சி னைதான் வடக்கு இளைஞர்களுக் கும் உள்ளது. தெற்கில் உள்ள இளைஞர்களுக்கு இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினை தான் வடக்கு இளைஞர்களுக்கும் இருக் கின்றது. மாறுபட்ட பிரச்சினை இல்லை. நாம் நாடு பற்றிச் சிந் தித்து சரியான முடிவை எடுத்தால் வடக்கு மற்றும் தெற்கு இளைஞர் களின் பிரச்சினைகள் தீரும். சில வேளை அந்த முடிவுகள் அரசியல் வாதிகளின் பிரச்சினைகளை தீர்க்காமல் இருக்கலாம்.

பிரதான வேட்பாளர்களின் தேர் தல் அறிக்கைகள் வெளிவந்துள் ளன. அவற்றுக்கிடையில் வேறுபா டுகள் இல்லை. அதிகாரப்பகிர்வு பற்றிப் பேசப்பட்டுள்ளது. நாட்டு கலாசாரத்துக்கு எதிரான விடயங் கள் உள்ளன- என்றார். (ஓ-44)

## கறுப்பினத்தவரை மணந்த நோர்வே பட்டத்தரசி

ஒஸ்லோ, செப். 1
நோர்வேயின் பட்டத்தரசி மார்தா லூயிஸ் அமெ ரிக்க கறுப்பினத்தைச்சேர்ந்த டுரெக்கை திரு மணம் செய்துள்ளார்.

இவர்களது திருமணம் யுனெஸ்கோவால் கலா சார மையம் என பிரகடனப்படுத்தப்பட்ட ஜீரஞ்சர் மலையிலுள்ள யூனியன் ஹோட்டலில் நடை பெற்றது. மார்தா லூயிஸுக்கு 52 வயது. டுரெக் கிற்கு 49 வயது. இவர்களது காதல் நிச்சய தார்த்தம் 2022ஆம் ஆண்டு நடைபெற்றது.

மார்தா லூயிஸ் ஏற்கனவே திருமணம் செய்து 2017ஆம் ஆண்டு தனது முதல் கணவரை விவாகரத்துச் செய்திருந்தார். முதல் கணவர் 2019ஆம் ஆண்டு தவறான முடிவெடுத்து உயி ரிழந்திருந்தார். முதல் கணவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். மார்தா லூயிஸ் அரச குடும்பப் பெயரை இனிமேல் பாவிக்க மாட்டேன் என்று அறிவித்தே திருமணபந்தத்தில் இணைந் துள்ளார். ஸ்கேண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த அரச குடும்பத்தினர் அனைவருக்கும் திரு மணத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாக இந்தத்திருமணத்தில் நோர்வே, சுவீடன், நெதர்லாந்து அரச குடும்பத்தினர் இதில் கலந்து கொண்டனர். டென்மார்க் அரசரும் அரசி யும் கலந்துகொள்ளவில்லை. (ஒ-6)






## நல்லூர் ஆலயம் முன்பாக நடமாடும் காட்சிக் கூடம்

யாழ்ப்பாணம், செப். 1
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்ச வத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையமான கருவி மாற்றுத் திறனாளி நிறுவன அங்கத்தவர்களால் தயாரிக்கப்பட்ட சுய உற்பத்திப் பொருள்கள் பருத்தித்துறை வீதியில் நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் முன்பாகச் சிறிய நடமாடும் காட் சிக் கூடமொன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நல்லூர்க் கந்தன் தீர்த்தத் திருவிழா வரை காட்சிக் கூடத்தைப் பார்வையிடமுடியும். இதேவேளை, கருவி நிறுவனத்தின் நிரந்தரக் கட்டட நிர்மாணப் பணி கள் நீர்வேலி பூதர்மடப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அதற்காக தம்மால் இயன்ற நன்கொடை களை வழங்கி உதவுமாறு மேற்படி நிறுவனத்தினர் கேட்டுள்ளனர் . (ஓ-25, 66)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.1
குருளைச்சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் பாட சாலையின் அதிபர் ஜனாப் என்.ஷாபி தலை மையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடை பெற்றது

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் மாவட்டச்செய லரும், யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளரு மான மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தின ராகவும், உதவிச்சாரணர் ஆணையாளர் திரு மதி பி. அருள்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ஓ-ரி-20-27)

## களஞ்சியப் பொறுப்பாளரை கைதுசெய்து விசாரிக்குக

நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப். 1
கொழும்பு நீதிவான் நீதிமன்ற களஞ்சிய அறையி லிருந்த உயிர்கொல்லி ஹெரோய்ன் காணாமல் போனமை தொடர்பாக களஞ்சியப் பொறுப்பாளரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்துமாறு நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு உத்த ரவிட்டுள்ளார்.

சான்றுப்பொருளாக பாரப்படுத்தப்பட்டு களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த 240 மில்லியன் ரூபா பெறுமதியான 12 கிலோ உயிர்கொல்லி ஹெரோய்ன் அண்மையில் காணாமல் போயிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## அங்கஜனின் தந்தையின் பெயரில் மதுபானசாலைக்கான அனுமதி

தம்பிராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 1
நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதன் அவரது தந்தை யான சதாசிவம் இராமநாதனின் பெயரில் மதுபானசாலைக்கான அனுமதியைப் பெற்றுள்ளார். இவ்வாறு அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பிராசா தெரிவித் துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார். மதுவரித் திணைக்க ளத் துக்கு அங்கஜன் இராமநாதனின் தந்தையான சதாசிவம் இராமநா தன் எழுதியதாக தெரிவித்த கடித மொன்றையும் வெளிப்படுத்தி னார். ஜனாதிபதித்தேர்தலை இலக்காக கொண்டு நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு மதுபா னசாலை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் கள் வெளியாகிவந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர அண்மையில் பரப் புரைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநா தன் உள்ளிட்ட பலரும் மது பானசாலை அனுமதிப் பத்திரங் களைப் பெற்றார் எனத் தகவல் களை வெளியிட்டிருந்தார். இதே வேளை தயாசிறி ஜயசேகரவின் கருத்தை மறுத்த அங்கஜன் இரா மநாதன், ஆதாரங்கள் வெளிப்ப டுத்தப்படாமல் சேறுபூசப்படுவ தாக விசனம் வெளியிட்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-20)

## 3 கிலோ கொக்கெய்ன் மலேசியப் பெண் கைது

கொழும்பு, செப்.1
11 கோடி ரூபா பெறுமதியான 3 கிலோ கொக் கெய்ன் போதைப்பொருளுடன் மலேசியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய குறித்த பெண் போதைப்பொ ருளை விற்பனை செய்ய முற்பட்ட வேளையில் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட் டுள்ளார். இனிப்புப் பொதிகளுக்குள் மறைத்து சூட் சுமமாக அவர் அதனை விற்பனை செய்ய முயன் றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவர் சிறை மீட்ட கந்தன்

வி.இராசநாயகம்

பண்டைய வரலாற்றுச்சிறப்பும், கந்தபுராண கலாசாரமும்மிக்க நல்லூரில் கோவில் கொண்டுஎழுந்தருளியிருக்கும்முருகப்பெருமான் தன் அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக் கிறான். நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், செல் வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும், கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும் அருள்பா லித்துக் கொண்டிருக்கிறான்.

### ஆலய கொடிச்சீலை வரலாறு

ஒவ்வொரு வருடமும் தலைமுறை தலைமுறை யாக, செங்குந்தா மரபில் வந்த சிவஞான முதலி யார் அவரது பேரன்மார்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரால், கொடியேற்றத்துக்கு முதல் நாள் கொடிச்சீலையானது திருநெல்வேலி கிழக்கு இரா மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் வீட்டிலிருந்து மங்கள வாத்தியம் சகிதம் எடுத்து வரப்பட்டு, சட்டநாதர் வீதியிலுள்ள வைரவநாதர் வல்லிபுரம் சாமி கொடித்தேர் மண்டபத்தில் கோவில் கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று பின்னர் அழகிய சித்திரத்தேரில் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு பக்திபூர் வமாகக் கொண்டுவரப்பட்டு ஆலய சிவாச்சாரி யார்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. இவ்வாறு பண் டைய பண்பாட்டு மரபுகள் இன்னும் தொடர் கின்றன.

முருகனின் தேர்வடம் பிடித்தால் அவனது அருள் கிட்டும் என்பதால் தேர்த்திருவிழா அன்று அடிய வர்கள் தேர் வடம் பிடிப்பதற்கு நான்கு வீதிகளிலும் முந்தியடித்துக் கொண்டு பக்திப் பரவசத்துடன் நிற்பதைக் காணலாம். தேர்த்திருவிழா திருநா ளில் தேவர் சிறை மீட்டுக் காத்த முருகப்பெரு மானை வணங்கி, வழிபட்டு திருவருள் பெற்று இனிதே வாழ்வோமாக!



# நல்லைக்கந்தன் தேரேறி வருகிறான்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்ச வங்களில் சிறப்பு உற்சவமாகிய தேர்த்திருவிழா இன்று பக்திபூர்வ மாக நடைபெறுகின்றது. கந்தப் பெருமானின் திருவருளுக்கு பாத்திரமாகி பல்வேறு திசைகளிலும் இருந்து பெருமான் தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் காண பல இலட்சம் அடியவர்கள் கூடுகின்ற காட்சி அற்புதமானதாக அமைந்து விடுகின்றது.

### அபய கரம் காட்டி தேரிலேறி வருகிறான்

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவனாக வலிமையும், அழ கும்,அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுளென, கந்தபுராண காவிய நாயகனாக சூரனுடலற வாரி சுவறிட வேலை விடவல பெருமான் என திருப்புகழ் நாயகனாக, தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய வேலன்,உமையாள் பயந்த இலட்சியமாக, சரவணத்தில் உதித்த ஆறுமு கனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்துார், திருவாவினர் குடி, திருச்சீ ரலைவாய், திருப்பரங்குன்றம் என்னும் ஆறு படை வீடுகளிலும் அமர்ந் தருள் புரியும் ஈசனாக, அழகிய சித்திரத் தேரினிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி பக்திப் பரவசத்தை தோற்றுவிக்கின்றது

### "தேறுதல்தர தேரேறும் ஆறுமுகப்பெருமான்"

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுகநாதனாக திருஅவதாரம் செய்தான் என்பது வரலாறு. நான்கு திசைகள், மேல், கீழ் என்ற இரண்டும் சேர்த்து மொத்தம் ஆறு இடங்களிலும் எம் பெருமானுடைய திருவருட் பார்வை செல்கின்றது என் பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுகசுவாமியே இன்று அடியார்களையும் அரவணைத்துக் காத்துநிற்கிறான். முருகனுடைய திருக்கரத்தில் இருக்கும் ஞான சக்திவேல் அன்பர்களின் பகையை அறுத்து மும்மலங்களைப் போக்கி நல்லருட் பேற்றினை அளிக்கவல்லது. அத்தகு வேலேந்திய பெருமானாக சங்காரத் தொழிலை நிறைவேற்றி இம்மை மறுமைப் பயன் களை தந்தருளி நல்லைக் கந்தன் தேரேறி அருள்பாலிக்கின்றான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லருள் பொழியும் நல்லைக்கந்தா.....

**நயினை நா.க.குமாரசூரியர்**

சிறப்புகள் பல பெற்ற முருகப்பெருமான் ஈழமணித்திருநாட்டின் பல்வேறு இடங்களில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கிறார். முருகப்பெருமான் ஆலயங்களுள் நல்லூர் ஆலயம் அமைந்திருக்கும் நல்லையம்பதி வரலாற்றுச்சிறப்பும், ஆன்மீகச் சிறப்பும் உடையது. அலங்காரக்கந்தன் என நல்லூரான் அழைக்கப்படுகிறான். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகப்பெருமான் அருகே அருட்சக்திகளான தெய்வானையம்மையும், வள்ளியம்மையும் வீற்றிருக்க சண்முகப்பெருமானாக காட்சிதருகிறார். உலகமெல்லாம் பரந்து வாழும் சைவ மக்கள் அனைவரும் கரம் கூப்பி வேண்டி நிற்கும் அற்புதமான தெய்வம் நல்லூரான்.

சங்கபோதி புவனேகபாகுவால் கட்டப்பட்ட, பொன்நிறமாய் மினிங்கும் இந்தக் கோயிலிலே அழகாய் வீற்றிருந்து அருள்மழை பொழியும் கந்தனை வணங்குவோருக்கு துன்பங்கள் நீங்கும். உதயசூரியனின் வெண்கதிர்கள் முருகப்பெருமானின் கோபுரங்கள் மீது படர்ந்து ஒளிவீச, மணிக் கோபுரத்தின் மணியோசை நாலாபக்கத்திலும் ஒலிக்க அடியார்களை தன் வசப்படுத்தி அருள்பாலிக்கும் ஆறுமுகனை அடியவர்கள் வருந்தியழைக்கும் போதெல்லாம் வேலோடும், மயிலோடும் தோன்றி அருள் புரிவான். "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருது வேல்" என்ற கருத்துக்கு தனிப்பெரும் தெய்வமாக நிற்கிறான் கந்தன். அப்படியான சிறப்புகள் பல கொண்ட நல்லூர்க்கந்தனுக்கு திருவிழா எடுப்பது நமக்கு புண்ணியத்தைச் சேர்க்கும். நல்லூர் ஆலய மஹோற்சவத்தின் 24 ஆம் நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.



தேரேறி வரும் அழகனைக்காண நாட்டின் நான்கு திசைகளிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் ஆலயத்திலே ஒன்று சேர்வார்கள். வேலனின் தேர்த்திருவிழாவை காண உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டிலிருந்தும் அடியார்கள் வருகை தருவார்கள். சிவ மகன் இன்று தேரேறி வருவதைக்கண்டு கரம் குவித்து மனமுருகி வணங்கி அழகனின் அருளாசியை பெறுவோமாக.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூரான் சிறப்பம்சம்

## நல்லைக் (கு) இணையில்லை!

வீதியெங்கும் வெண்மணற் பரப்பு– நீல
விதானம் அதில் நித்திலப் பதிப்பு
நாதசுர கானமெழும் வேதவொலி காதில் விழும்
நல்லைக்(கு) – இணை– இல்லை

காதலொடு பாடுமொரு கூட்டம்– பூசை
காணவிரை யும்பிறிதோர் கூட்டம்– குல
மாதர், வல தானவர்கள், பாலர், இள வாலைகள் எம்
மருங்கும் – வந்து நெருங்கும்

நாவலனார் தொண்டு பற்றி ஆயும்– மா
நாடு நடக்கும், இருந்து கேளும்
பாவலர்கள் பாடுதமிழ் பண்ணிசைவிற் பன்னர் தமிழ்
பருகு – நெஞ்சம்– உருகு!

காவல் எல்லை நாலினிலும் புரிவான்– எங்கள்
கணபதியே பெருமைகளுக் குரியான்
தேவர்முனி வோர் அரிய யோகியர்கள் கூடி உண்மை
தெளிவார் – அருள்– பொழிவார்!

கவிஞர் சோ.பத்மநாதன்

## நல்லைத் தேர்க் கீர்த்தனம்

பல்லவி
நீரோடும் விழிகளினால் ஆறாகும் நல்லைத்
தேரோடும் வீதியெங்கும் சேறாகும்

அனுபல்லவி
பாரெங்கும் பகையோட்ட வேல் பாயும் தமிழ்
வேரினிலும் ஓமென்னும் ஒலி தோயும்

சரணம் 1:
சங்கமதில் தமிழாய்ந்த தனி முருகோனே!
சாவினிலும் தாங்க வரும் தனி முதல்வோனே!
அங்கமதில் ஆறுமுகம் கொள் அழகோனே!
அமைந்தபெரு மாதிருவர் உடன் எழுவோனே!

சரணம் 2:
ஆவணியில் வாடி நின்று விரதம் பூண்பேன்!
ஆடி வரும் தேரினிலே உனையே காண்பேன்!
பாவணிந்துன் பதமலரில் நானும் வீழ்வேன்!
பைந்தமிழை நீ அருள நானும் வாழ்வேன்!

சரணம் 3:
நாதமணி இசையினிலும் உந்தன் கோலம்!
நவமணிகள் அசைவினிலும் உந்தன் கோலம்!
வேதயிசைப் பண்ணதிலும் உந்தன் கோலம்!
வேண்டியமும் அன்பரிலும் உந்தன் கோலம்!

சரணம் 4:
செல்லப்பன் யோகனெனக் குருவாய் வந்தாய்!
சேருமன்பர் பக்தியினால் எதையும் வேண்டாய்!
வெல்ல வரும் வேல் என்பேன் பகையே மாய்ப்பாய்!
வேண்டும் உந்தன் அருள் என்பேன் வினையே மாய்ப்பாய்!

கலாநிதி செ. சுதர்சன்
தமிழ்த்துறை. பேராதனைப் பல்கலைக்கழகம்

## திருத்தேரேறி நீ வலம் வருவாய் நல்லூரானே!

தமிழ்த் தெய்வமாம் எழுந்தவனே!
தாமரை மலர்கள் மீது அவதரித்தவனே!

திருத்தேரேறி வலம் வரும் நல்லூரனே!
தீராப்பிணி தீர்க்க வரும் வேலவனே!

துய்ய நின் மலர்ப்பாதம் பணிந்தேனே!
தூய கழல் தொழு தெழுதேனே!

தெவிட்டாத இன்பப் பொருளோனே!
தேடி வந்தோர் குறை தீர்ப்பவனே!

தைப்பூச நாளின் அதிபதியானவனே!
தொல்லை பல களைபவனே!

தோகை மயில் மீது ஆடிவருபவனே! நின்
தோற்றம் கண்டு களிப்புறுவேன் முருகனே!

மிஷாந்தி ஜெயசிங்கம்

## நம்மைக் காக்க மயிலேறி வருவாயா? கந்தா!



நல்லூரில் வீற்றிருந்து நல்லாட்சி
புரியும் கந்தா!
அடியவர்கள் குறை தீர்க்கும்
அலங்காரக் கந்தா!
பரமனுக்கு உபதேசம்
செய்த பால முருகா!
நாட்டில் வாள் வெட்டுக்
கலாசாரம் ஒருபுறம்
போதைவஸ்து கலாசாரப்
பாவனையே மறுபுறம்
தவறான முடிவுகள் எடுத்து
தினம் தற்கொலை புரிவோர் ஒருபுறம்
எல்லையில்லா துன்பமதில்
எந்நாளும் தவிக்கிறோம்.
எம்மினத் தவர்களைத் துன்பத்தில்இருந்து
காத்திடமயிலேறி வருவாயா கந்தா!

நயினை விசு இராசநாயகம்.

## துயர் துடைக்க வந்திடுவாய்

வேல் கொண்டு வினைகளைய
நானிலத்தில் நீயுண்டு
தாள்தனையே பணிந்து நிற்கின்றோம்
தயக்கமின்றி நாமிங்கு
வரலாறு பல கண்ட நிகரில்லாப் பதியினிலே
தகராறு ஏதுமின்றித் தனித்து நிற்கும் தலைவன் நீ
கரைகாணா அலைகடல்போல் பக்தர் படை ஆழ்ந்துவர
விரைவாக ரதமேறித் துயர்துடைக்க வந்திடுவாய்

சு.ஆதிரை

## வாரிவரமளித்திடப்பா

இரதமேறி வினையறுக்கும் பெரும் ஜோதியானவனே!
இரதவடம்பிடித்த அடியவர்க்கு வரமளிக்கும் வள்ளலே!
நல்லை நகர்ப்பதியமர்ந்து நடுவுநிலை காப்பவனே!
நற்குணங்கள் நாம்பெறவே நல்லறிவைக் கொடுப்பவனே!

தேரேறி வரும்அழகை காணவரும் அடியவர்க்கு
தேனூற்றாய் அருள்சுரக்கும் தேன்தமிழ்க் கடவுளே!
முந்தை வினையறுத்து முத்திபெறச் செய்பவனே!
முக்காலம் தமிழ் வளர்த்த எங்கள் குலநாயகனே!

தந்தைக்கே குருவான் தகப்பன் சுவாமியே!
தங்கநிற மேனியனாய் ஜொலிக்கின்ற அழகனே!
காத்தருள வேண்டுகின்ற அடியவர்கள் மனமதிலே
காத்திரமாய் உறைகின்ற சண்முகவடிவேலனே!
வடம்பிடித்து இரதமிழுப்போம் வாரிவரமளித்திடய்யா

வல்லை வாசன்

## நல்லை நகர் நாயகனே வா வா முருகா

அழகன் முருகனே வா வா முருகா
அலங்காரக் கந்தனே வா வா முருகா
அழகு மயில் வாகனமே வா வா முருகா
ஆறுதல் தந்திடவே வா வா முருகா
இன்னல்கள் நீக்கிடவே வா வா முருகா
ஈசன் மைந்தனே வா வா முருகா
உள்ளம் உருகி அழைக்கின்றோம் வா வா முருகா
ஊரெங்கும் ஒளிபெறவே வா வா முருகா
எல்லையில்லா அழகனே வா வா முருகா
ஏகாந்தக் குமரனே வா வா முருகா
ஐங்கரன் சோதரனே வா வா முருகா
ஆனந்தம் தந்திடவோ வா வா முருகா
தரணி யெங்கும் நலம்பெறவே வா வா முருகா
நல்லை நகர் நாயகனே வா வா முருகா
நாடியோர்க்கு அருள்புரியவே வா வா முருகா

லோகன்

## நாம் கையேந்தி நிற்கின்றோம்

தங்கத் தேரினிலே வீதியுலாவரும் நல்லூரானே
இன்றல்ல என்றுமே உமது புகழ் பாடுகிறோம்
பங்கமேது மில்லாமல் நீரெமக்கு எம்மினத்தவர்கள்
ஒற்றுமையாய் ஓரணியில் ஒன்றிணைவதற்கும்
எங்கும் சமாதானமும் சந்தோசமும் மலர்வதற்கும்
இனமத முறுகல்கள் முளைக்காதிருப்பதற்கும்
நம் நாட்டவர்களுக்கு நல்லறிவை நல்கிட வேண்டுமென
நாம் தினமும் கையேந்தி நிற்கின்றோம்.

சி.காசிப்பிள்ளை

## நல்ல வழி காட்டிடுவாய் மைந்தனே!

நல்லைக் கந்தனே! நடராஜன் மைந்தனே!
நந்தனன் மருகனே! நல்லருட் குமரனே!
வல்ல வேலனே! சூரசங் காரனே!
வள்ளி மணவாளனே! வள்ளல் பெருமானே!
வெல்லும் வேலுடையாய்! வேதனை தீர்த்திடுவாய்!
சேவற் கொடியுடனே தேரேறும் பெருமானே!
நல்ல வழியதனை நமக்குக் காட்டிடுவாய்!
நாளும் நாம்படும் துயரினைப் போக்கிடுவாய்!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

## வக்கிரமானவர்களை வெளிக்கொணர்வது

அழகுக்கும் அருச்சனைக்கும்
அறிவான ஆலயம் நல்லூர்,
அலங்காரக் கந்தனாய் என்றும்
ஆச்சர்யமாவது நல்லூர்,
நிழலாக எமைக் காக்கவே
நித்தம் உலாவில் நல்லூர்
நீள்நிலம் நலமோடிருக்கவே
நேர்த்தியாக விளங்குவது நல்லூர்,
புளகாங்கிதமோடு பூத்திருப்பதே
புண்ணியமான நல்லூர், பூமிக்கு
வேண்டுவதை ஆய்ந்து போதிக்க
வல்லது நல்லூர், வளமான வாழ்வுக்கு
என்றும் வரமாவது நல்லூர்,
வக்கிர மானவர்களைப் பிடித்து
வெளிக் கொணர்வது நல்லூர்.

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- EDUCATION -
Yaalpaanam 4
JAN 2025 INTAKE

Some of our Successes Stories




See more

UK | AUSTRALIA | USA | CANADA | NEW ZEALAND | GERMANY

கலந்தாய்வு இலவசம்
(No consultant fees)

07 Sep 10 AM to 03 PM VAVUNIYA பொது நூலகம்


08 Sep 10 AM to 03 PM JAFFNA - பொது நூலகம் கேட்போர் கூடம்

- புலமைப்பரிசில்கள் (Scholarship)
- IELTS தள்ளுபடிகள
- மலிவான கல்வி கட்டணம்
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

ICFS INTERNATIONAL CENTER FOR FOREIGN STUDIES
Call us
077 740 6793 | 0112 827 320
151D, High Level Road, Nugegoda
www.icfs.lk

THORN® BRAND
முள்ளுக்கம்பிகள்
உன்னதமான தயாரிப்பு



Do not Accept if Seal is Broken or Damaged
முத்திரை உடைந்து அல்லது சேதமடைந்து இருந்தால் ஏற்க வேண்டாம்

வட மாகாண மக்களுக்கு ஒரு அறிவித்தல்!
எமது THORN BRAND முள்ளுக்கம்பிகள் போலியான சின்னம் பொறிக்கப்பட்டு சந்தையில் விற்கப்படுவதாக அறிகின்றோம்.

எமது தரமான உற்பத்திகள் எமது காட்சியறைகளிலும், எம்மால் அங்கிகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களான:

1. N.P. ஹார்ட்வேர் - வவுனியா - 077 232 7014
2. ரூபன் ஹார்ட்வேர் - வவுனியா - 021 228 3378
3. ஹரி கிருஷ்ணா - கிளிநொச்சி - 021 228 3378
4. முருகண்டிப்பிள்ளையார் - கிளிநொச்சி - 021 228 5155
5. ஜெயலங்கா என்டர்பிரைசஸ் - முருங்கன் - 023 205 0359
6. தரன் ஹார்ட்வெர் - யாழ்ப்பாணம் - 021 222 2664

ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

போலியான THORN வர்த்தக முத்திரையுடன், அங்கிகரிக்கப்படாத உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர், முள்ளுக்கம்பிகளை விற்பனை செய்தால் சம்பந்தபட்ட THORN நிறுவனத்தினரால் வழக்கு தொடரப்படும்.

வாடிக்கையாளர்கள் QR Code மற்றும் Bar Code என்பவற்றைப் பரிசிலனை செய்து எமது உண்மையான தயாரிப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured & Marketed By
N. VAITILINGAM & CO (PVT) LTD
NO.70, K. CYRIL C. PERERA MAWATHA, COLOMBO-13
TEL: +94 11 2433143, 2327669 EMAIL: nvclgroup@slnet.lk
Branch:470, Old Moor Street, Colombo 12, Tel: +94 11 2327488
90-92, Mill Road, Vavuniya. Tel: +94 24 4925809

Browns Agriculture

Browns
DYNATRAC



- திறமையான SIMPSON இயந்திரம்
- சூப்பர் சுஷட்டில் தொழில்நுட்பம்
- 12 x 12 கியர் அமைப்பு
- சீல்பண்ணப்பட்ட PORTAL AXLE
- விசேடமான QUADRA PTO அமைப்பு
- அதிக உயரம்
- DYNA LIFT ஹைட்ரோலிக்
- ULTRA PD தொழில்நுட்பம்

*நிபந்தனைகள் பொருந்தும்
ரூ. 6,499,000/- இலிருந்து மேல்

Browns TAFE

மேலும் விபரங்களுக்கு அழைக்கவும்
0761 831 343 / 0772 842 433 / 0773 457 988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை அறிவித்தால் பகிஷ்கரிப்பை பரிசீலிப்போம்

## சஜித்துக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.1**
**ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ அனுப்பிய கடிதத்துக்குப் பதிலளித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டித் தீர்வை நடைமுறைப்படுத்துவதாக தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பதுடன் அதைச் சிங்கள மக்கள் மத்தியில் கூறினால் தேர்தல் புறக்கணிப்பு என்ற தமது நிலைப் பாட்டை மீள்பரிசீலனை செய்வதாகக் குறிப்பிட்டுள்ளது.**

இதுதொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுப்பிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிவிலான தீர்வும் தமிழ் மக்களது இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை. ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தம் தீர்வுமல்ல தீர்வுக்கான தொடக்கப் புள்ளியுமல்ல. மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் (2016 - 2019) தயாரிக்கப்பட்ட இலங்கைக்கான புதிய அரசமைப்பு வரைபானது 'ஏக்கிய இராச்சிய' அடிப்படையிலானது என்பதனை சுட்டிக்காட்டுவதுடன் அதனை நாம் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், புலம்பெயர் தமிழ் மக்கள் அச்சமின்றி முதலீடுகளை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களாக வாழக்கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரே வழியாகும் என்பதே எமது கொள்கை நிலைப்பாடாகும்.

இதனடிப்படையில், ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படல் வேண்டும், இணைந்த வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும், நாடு மதச்சார்பற்றதாக இருத்தல்வேண்டும், தமிழர் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்படல்வேண்டும், தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல்வேண்டும், இவற்றின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு எட்டப்படல்வேண்டும்.

இவற்றைத் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுவதன் மூலம், நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் தீர்வுகாண விளைகின்றீர்கள் என்ற உண்மை இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தப்படல்வேண்டும்.

அவ்வாறு தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்படி விடயங்கள் தெளிவாகவும் முழுமையாகவும் உள்ளடக்கப்படும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற நிலைப்பாட்டினை மீள் பரிசீலனை செய்வது தொடர்பாக நாம் ஆராயமுடியும் என்பதனையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-20)

## சுகாதாரக் குறைபாடுகள் உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப்.1
சுழிபுரம் பகுதியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வெதுப்பகம் ஒன்றுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் அண்மையில் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது நீண்டகாலமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வெதுப்பகம் ஒன்று கண்டறியப்பட்டது.

அதனையடுத்து வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்கு விசாரணையில் வெதுப்பக உரிமையாளருக்கு 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை சீல்வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டது. (ச-25, 66)



தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான விற்பனைச் சந்தை பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் 20 முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தினர். (ச-45-9)



## ஐ.ம.ச. தேர்தல் அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, செப்.1
கிளிநொச்சி மாவட்ட பிரதான அமைப்பாளர் ம.மரியசீலன் தலைமையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கட்சியின் வடமாகாண பிரதான அமைப்பாளர் உமாச்சந்திரா பிரகாஸ், கட்சியின் மாவட்ட முகாமையாளர் பெ.ரஞ்சன், மாவட்ட பிரதி அமைப்பாளர் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ச-25,113)

## நாட்டை வதைக்கிறது பொருளாதாரச்சிக்கல்

### ஆய்வில் தகவல்

கொழும்பு, செப்.1
இன்று நாடு எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் பொருளாதாரப் பிரச்சினை, பணவீக்கம், வேலையின்மை என்பன காணப்படுகின்றன என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. அரச சார்பற்ற நிறுவனமொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

| | 2023 | 2024 |
|---|---|---|
| பொருளாதாரப் பிரச்சனை | 69% | 56% |
| வாழக்கைச்செலவு | 59% | 62% |
| வேலையின்மை | 16% | 38% |
| வரிகள் | 13% | 21% |
| ஊழல் இலஞ்சம் | 7% | 6% |
| சுகாதார சேவைகள் | 3% | 6% |
| போதை வஸ்து பாவனை | 14% | 5% |
| கல்வி | 4% | 2% |

## பேருந்துச்சேவை நடத்தக்கோரிக்கை

கிளிநொச்சி, செப்.1
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரிக்கு மாணவர்கள் வந்து செல்லக் கூடிய வகையில் பேருந்துச் சேவைகள் நடைபெறவேண்டும் என பெற்றோரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பல கிராமங்களில் இருந்து பெருமளவு மாணவர்கள் இக்கல்லூரிக்கு வருகை தருகின்றனர்.

இதனை விட முல்லைத்தீவு, விசுவமடு பகுதியில் இருந்தும் மாணவர்கள் இக்கல்லூரிக்கு வரும் நிலையில் பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வரை நடைபெறும் பேருந்துச் சேவைகளில் மாணவர்கள் குறித்த நேரத்தில் இக் கல்லூரிக்கு வந்துசெல்ல முடியாத நிலைமையும் காணப்படுகின்றது என பெற்றோர் சுட்டிக்காட்டினர். (ச-22,13)

## மன். நீதிமன்றம் மீது தாக்குதல்; குற்றவாளிகள் அடையாளம்

வவுனியா, செப்.1
கடந்த 2012 ஆம் ஆண்டு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் 52 சந்தேகநபர்களில் 4 சந்தேகநபர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய 48 சந்தேகநபர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே 4 சந்தேகநபர்கள் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட நிலையில் தீர்ப்புக்காக மன்று எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் அதுவரை சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்; — ஒரும்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.


— நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆவணி 16 | ஞாயிற்றுக்கிழமை (01.09.2024) | சிகரம் :216

# விராஜ் மெண்டிஸ் :

## ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியா ஆளுமை

● எழில்



ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கென பல்வேறு பரிமாணங்கள் உண்டு. அந்தப் பரிமாணங்களின் பாதைகள் சமாந்தரமாகப் பயணித்தாலும் அதன் தொடக்கமும், இலக்கும் ஒன்றாகவே இருக்கின்றன. விராஜினுடைய ஈழத்தமிழர் தேசிய விடுதலைக்கான பங்களிப்பு அரசியல் செயற்பாட்டுத் தளத்திலே காத்திரமானதாக அமைந்திருந்தது. தமிழினப் படுகொலை, அரசியல் வரலாற்று நிகழ்முறைக்கூடான பரிமாணத்தில் கட்டமைக்கப்பட்டு முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு, தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் விராஜினுடைய பங்களிப்பு முன்னெப்போதும் இல்லாதவாறு அவசியமானதாகவும் சுதந்திரமானதாகவும் அமைந்திருந்தது. விராஜினுடைய பங்களிப்பை ஒரு சில தளங்களில் தொட்டுச் செல்வது ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க உதவி செய்யும்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் விடுதலைப் பிரளயத்தையும் (Paradigm) அதன் விடுதலை முகவராண்மைத் தன்மையையும் (Agency) தமிழர் தாயகத்திலிருந்து அகற்றி ஐக்கிய நாடுகள் சபையை நோக்கி மையப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐ.நா.வுடன் சேர்ந்து அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றையும் விடுதலைத் தருநர்களாக அறிமுகப்படுத்திய செயற்பாடு நடைபெற்றது. ஏகாதிபத்தியப் பேரரசு கட்டமைத்த மீயுயர் (Meta Narrative) அரசியல் சொல்லாடலை கட்டவிழ்த்த அரசியல் செயற்பாட்டுத் தளத்தை 2009 இன் பின் பொதுவெளி அரசியலுக்குத் திறந்த விராஜ், விடுதலைப் புலிகளைத் தடை செய்ததும், 2002 பேச்சுவார்த்தையில் புலிகளை ஓரம் கட்டியதுமே முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கான காரணமென்பதை தர்க்க ரீதியாக விளக்கியதோடு, ஐக்கிய இராச்சிய, அமெரிக்க உடந்தைத் தன்மையையும் வெளிக்கொணர்ந்தார்.

ஈழத்தமிழினப் படுகொலையில் அமெரிக்க, ஐக்கிய இராச்சிய அரசுகளுக்கான உடந்தைத் தன்மை வெளிப்படுத்தப்பட்டமை அவர் ஒழுங்கமைத்த மூன்று மக்கள் தீர்ப்பாயங்களுக்கூடாக நடந்தேறியது. இறுதியாக அவர் சார்ந்த இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கும் காணொலியும் அதனது விவரணமும், எவ்வாறு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க அழுத்தத்தினால், பேச்சு வார்த்தையைக் கைவிட்டதென்றும், அதுவே இறுதியில் சிறிலங்கா அரசிற்கு இராணுவ ரீதியில் ஆயுத விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதற்குரிய பச்சைக் கொடியைக் காட்டியதென்பதையும் விளக்குகின்றது. இதற்காக இடதுசாரித் தீவிர அரசியலையும், புவிசார் அரசியல் திறனாய்வையும், ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்புக்கெதிரான சொல்லாடலையும் கொள்கைத் திறனாய்வுக் கற்கைநெறியாக அவர் கையிலெடுத்தார். இவையே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட விடுதலைப் பிரளயத்தின் முகவராண்மைத் தன்மையை தக்க வைக்க முடியுமென நம்பினார். அதுவே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றது. ஐக்கிய இராச்சியம் ஆசியாவின் புவிசார் அரசியல் நலன் சார்ந்து அதன் பேரரசைத் தக்க வைப்பதற்காக கட்டமைத்த ஒற்றையாட்சி முறைமையே, வரலாற்று நிகழ்முறையாக மாற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் பயணித்தது என்பதில் ஆழமான திட நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த வகையில், ஈழத் தமிழினப் படுகொலையில் பிரித்தானியக் காலனித்துவத்தின் பங்கு காத்திரமானது எனப் பேசிவந்தார். 2009 க்குப் பின்னர் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளம் ஐ.நா.வின் மைய குழாமை நோக்கியே திருப்பப்பட்டிருந்தது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் விராஜ் அதன் திசையை மாற்றி ஈழத்தமிழர் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளத்தை இலத்தீன் அமெரிக்க நாடுகளை மையப்படுத்தி, அதற்கான முன்னெடுப்புகளை செய்திருந்தார். தமிழினப் படுகொலை நினைவு நாளான 'மே 18' பல்வேறு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்றும் நினைவுகூரப்பட்டு வருகின்றது என்பது அதற்கான ஆதாரமாகும். நினைவுகூரலை அரசியல் செயற்பாட்டுத் தளமாக இயங்கு நிலைக்கு உட்படுத்துதலை ஒரு உத்தியாக கையாண்டார். மக்கள் தீர்ப்பாயத்தில், பெரும்பாலான தீர்ப்பாய நடுவர்கள் இலத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நில மீட்பு விடுதலைக்காகப் போராடும் பல்வேறு பூர்விகக் குழுக்களும் அதில் ஒருங்கிணைந்திருந்தமை, இன்னொரு உதாரணமாகும்.

ஜேர்மனியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'நாதன் தம்பி வழக்கு', 2009 இன் பின்னரான சர்வதேச ஈழத்தமிழர் விடுதலை சார் அரசியல் தளத்தில் மிக முக்கியமானது. இவ் வழக்கில், விராஜினுடைய வாதமாக அமைவது நாதன் தம்பி, ஆனந்தராஜ் இருவருமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டினார்கள். ஏனென்றால் விடுதலைப் புலிகள் தான் தாயகத்தில் தமிழினப் படுகொலையை தடுப்பதற்குரிய படைபலத்தைக் கொண்டிருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ததன் மூலம் தமிழ் மக்களுக்குரிய பாதுகாப்புக் கவசம் இல்லாதொழிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததன் மூலம் புலத்தில் அவர்களது செயற்பாடு முடக்கப்பட்டது மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் அமைப்பிற்காகப் பணம் சேர்ப்பது குற்றமாக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட காரணங்கள் முள்ளிவாய்க்காலில் தமிழினப்படுகொலை உச்சந் தொடுவதற்குரிய பாதையை இலகுவாக சிறிலங்கா அரசிற்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வாறே விராஜ் தமிழினப் படுகொலை உடந்தைத் தன்மைக்குரிய ஆதாரங்களை கட்டமைத்தார். இதனது இறுதித் தீர்ப்பு வெளிவர முதல் விராஜ் மெண்டிஸ் இயற்கை எய்தியது வேதனையானது தான்.

> விராஜ் ஒரு சிங்களவராக இருந்தும் கூட , சிங்கள மக்கள் மத்தியிலும் ஈழத் தமிழர் போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். அந்த ஆதரவுத்தளம் தொடர்ந்து இயங்கு நிலையில் இருப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்து நடத்தியிருந்தார்.

விராஜ் ஒரு சிங்களவராக இருந்தும் கூட , சிங்கள மக்கள் மத்தியிலும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். அந்த ஆதரவுத்தளம் தொடர்ந்து இயங்குநிலையில் இருப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்து நடத்தியிருந்தார். அவற்றினுடைய பங்களிப்புப் பற்றி பொது வெளியில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. அரசியல் தஞ்சம் கோரி ஜேர்மனி நாட்டுக்குள் உள்நுழைபவர்களுக்கு அவருடைய ஆதரவுக்கரம் எப்போ

19



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




**க.சுவஸ்திகன்**
தரம்-4
சென்.ஜோன் பொஸ்கோ




**சி.பிரவின்**
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.




**K.திவ்ஷாரா**
தரம் -3
யா/ ஆவரங்கால் நடராஜா மகா வித்தி.



**கி.அட் ஷயன்**
தரம் - 4B
யா/சென்.ஜோன் பொஸ்கோ





**T.தனுஜ்கா**
தரம் - 6B
யா/உடுவில் மகளிர் கல்லூரி



**பி. யருசன்**
4A
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை



**சி.சிவநயா,**
தரம் - 2
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



**ஷ.அட்ஷயா**
தரம்- 9
ய/மானிப்பாய் மகளிர் கல்லூரி

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டுக்கு ஓடிச்சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் [illegible] இருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. [illegible]த் சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒருபகுதியினுள் ஒருவலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும்போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழேவிழுந்துவிட்டது. இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கடைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது.

அரசன் "இச் சிறு சிலந்தியே பலமுறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்யவேண்டும்" என்று எண்ணினான். மறுபடியம் தன் எதிரியுடன் போர்புரிய தீர்மானித்தான் கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல்:

# தமிழ்மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?



○ உற்சவி

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் குறிப்பாக கணித விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களுக்கு என்னென்ன பெயர்கள் என்று பார்த்தால், விஞ்ஞான மண்டபம்; விஞ்ஞான உலகம்; விஞ்ஞான சமுத்திரம்; விஞ்ஞான நீரோட்டம். விஞ்ஞான மூலை,இணைந்த கணிதத்தில் வெற்றி,மிஸ்டர் பிஸிக்ஸ்,... இப்படியே நீண்டு கொண்டு போகும்.இப்பெயர்கள் யாவும் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் தொடர்பான ஒரு சமூகத்தின் அபிப்பிராயங்களைக் காட்டுபவை. இந்நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் படிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் முன்னணி தனியார் பாடசாலைகள் சிலவற்றில் கணித அல்லது விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர்தான் அதிபராகவும் இருக்கலாம் என்று எழுதப்படாத விதி உண்டு. கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் குறித்து தமிழ் சமூகத்தில் உயர்வான மதிப்பீடுகள் உண்டு. இவ்வாறு கணித விஞ்ஞானத்துறைகளில் அதிகம் நாட்டமுள்ள ஒரு சமூகமானது தன் நடைமுறை வாழ்வில் எல்லாவற்றிலும் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளை கொண்டிருக்கவேண்டும். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கணிதமாக அணுகவேண்டும். ஆனால் தனது பாடத்தெரிவுகளில் விஞ்ஞானத்துக்கும் கணிதத்துக்கும் முக்கியமான இடத்தைக் கொடுக்கும் ஒரு சமூகம், தனது அரசியல் தெரிவுகளில் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்து வருகின்றது?

உடுப்பு வாங்கப் போனால் புடைவைக் கடையில் எத்தனை மணித்தியாலத்தை எமது பெண்கள் செலவழிக்கிறார்கள்? சந்தையில் நாளாந்தம் காய்கறி வாங்கும் பொழுதும் எவ்வளவு கவனமாகத் தெரிந்தெடுக்கிறோம் ? தக்காளிப் பழத்தை நிறம் பார்த்து; அமுத்திப் பார்த்து ஒவ்வொன்றாக தெரிகிறோம். கத்தரிக்காயை நிறம் பார்த்து; அமுத்திப் பார்த்து ஒவ்வொன்றாகத் தெரிகிறோம். இவ்வாறு அன்றாட வாழ்வில் தெரிவு என்று வரும் பொழுது கவனமாகவும் நேரமெடுத்தும் பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், தனது அரசியலில் அவ்வாறு நிதானமாகவும் கணிதமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திக் கின்றதா? அவ்வாறு விஞ்ஞானபூர்வமாகச் சிந்தித்திருந்தால் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கவேண்டும்? எப்பொழுது எடுத்திருந்திருக்க வேண்டும் ?

தபால் மூல வாக்களிப்புக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்கள்தான் உண்டு. ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சி எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தன் முடிவை அறிவிக்கவில்லை. இன்னொரு கட்சி பகிஷ்கரிக்கின்றது. ஏனைய கட்சிகள் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துகின்றன. இதில் எது விஞ்ஞானபூர்வமான முடிவு ?

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகளைக் கையாள்வது என்பது ஒரு கணித ஒழுக்கம். அப்படிப் பார்த்தால் தமிழ் மக்கள் தம் முன்னால் இருக்கும் எல்லா சாத்தியக்கூறுகளையும் ஆழமாகப் பரிசீலித்து முடிவுகளை எடுக்கின்றார்களா?

தமது கட்சிகளும் தலைவர்களும் எடுக்கும் முடிவுகளை குறித்து தமிழ்மக்கள் கேள்வி கேட்கின்றார்களா? நீங்கள் எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தீர்கள் என்று தமது தலைவர்களிடம் அவர்கள் கேள்வி கேட்பதுண்டா? சந்தையில் காய்கறிகளைத் தெரியும்பொழுது தெரிவு பிழைத்தால் உணவு வயிற்றில் நஞ்சாகிவிடும். பள்ளிக்கூடத்தில் பாடத்தெரிவு பிழைத்தால் கல்வி நரகமாகிவிடும். உடுப்புக் கடையில் தெரிவு பிழைத்தால் குறிப்பிட்ட நபரின் தோற்றக் கவர்ச்சி குறைந்து விடும். ஆனால் அரசியலில் தெரிவு பிழைத்தால் என்ன நடக்கும் ?

> “ கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசியலில் எடுக்கப்பட்ட புத்திபூர்வமற்ற விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகள் அனைத்தையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றிப் பகுப்பாய்வு செய்யவேண்டும். தமது வாழ்வின் அன்றாட தேவைகளுக்காக சுண்டிப் பார்த்து பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், அரசியலிலும் அவ்வாறு சுண்டிப் பார்த்து முடிவெடுக்குமா?

2009 க்கு பின் வந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மூத்த தலைவராகிய சம்பந்தர் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு முடிவை எடுத்திருக்கலாம். அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருந்திருந்தால் தமிழ் அரசியலின் போக்கே வேறு திசையில் போயிருந்திருக்கும். சம்பந்தரின் பூதவுடல் தந்தை செல்வா கலையரங்கில் கூரை பதிந்த அந்த சிறிய மண்டபத்தில் விசிறிகளின் கீழே தனித்து விடப்பட்ட அவலம் ஏற்பட்டிருக்காது. ஓர் அரசனைப் போல அவருக்கு ராஜ மரியாதை கிடைத்திருந்திருக்கும்.ஆனால் சம்பந்தர் ஒரு முதிய தலைவராகவும் அனுபவத்தில் பழுத்த தலைவராகவும் அன்று முடிவெடுக்கவில்லை. போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களிப்பது என்று முடிவெடுத்தார்..

அந்தத் தளபதி,போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து போரை வழிநடத்திய ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகத் திரும்பியிருந்தார்.அது போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் வந்த போட்டி. அவ்வாறு ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரும்பிய தளபதியை வைத்து ராஜபசக்களைஅவர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர் என்பதற்காக அல்ல,மாறாக அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்கிறார்கள் என்பதற்காக, அரங்கில் இருந்து அகற்ற முயற்சித்த நாடுகளின் கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றி தமிழ்த் தரப்பு முடிவெடுத்தது. அதன் விளைவாக சரத் பொன்சேகாவோடு ஒரு உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது. விளைவாக அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா மட்டும் தோற்கவில்லை, சம்பந்தரும் தோற்கத் தொடங்கினார். சம்பந்தரின் வழியும் தோற்கத் தொடங்கியது.

தமிழ் மக்களை அழிக்கும் போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து, அதற்காக அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக ஒன்றுதிரட்டிய ஒரு குடும்பத்துக்கு எதிராக வாக்களிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு, தமிழ் மக்கள் அந்த குடும்பத்தின் ஆணையை ஏற்றுப் போரை முன்னெடுத்த ஒரு தளபதிக்கு வாக்களித்தார்கள். போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களித்துவிட்டு, அந்தப் போரை ஓர் இன அழிப்பு போராகவும் அங்கே போர்க் குற்றங்கள் நடந்தன என்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்தன என்றும் அனைத்துலக சமூகத்தின் முன் போய் நின்று முறையிடுவது ஒரு புத்திசாலியான சமூகம் செய்யக்கூடிய அரசியலா? சரத் பொன்சேகா இப்பொழுதும் தனது தேர்தல் பிரசாரங்களில் தான் தற்கொலையாளியின் குண்டினால் தாக்கப்பட்ட பொழுது பயணித்த காரை ஒரு காட்சிப் பொருளாகக் காவித்திரிகிறார். ஆனால் அவருடைய பிரசாரக் கூட்டங்களுக்கு சிங்கள மக்கள் வருவது குறைந்துவிட்டது. அந்தக் காருக்கு இருந்த கவர்ச்சி குறைந்துவிட்டது.


ஆனால் அந்தப் போரை இனஅழிப்புப் போர் என்று குற்றம் சாட்டும் ஒரு மக்கள் கூட்டம், அந்தப்போரை முன்நின்று நடத்திய ஒரு தளபதிக்கு, அந்தப் போரில் வெற்றி கொண்டதற்காகவே ஃபீல்ட் மார்ஷல் விருது பெற்ற ஒரு தளபதிக்கு, அந்தப் போர் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு கழிந்திருந்த ஒரு காலகட்டத்தில், அந்தப் போரினால் அகதியானவர்கள் அப்பொழுதும் நலன்புரி நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், அந்தப் போரினால் காணாமற் போனவர்களை உறவினர்கள் தேடிப் போராட முடியாதிருந்த ஒரு காலச் சூழலில், அந்தப் போரில் கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில்,கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்தது. கணிதத்தை விஞ்ஞானத்தை விரும்பிக் கற்கும் ஒரு மக்கள் எடுக்கக்கூடிய புத்திசாலித்தனமான முடிவா அது? அல்லது தீர்க்கதரிசனமும் துணிச்சலும்மிக்க முடிவா அது?

நிச்சயமாக இல்லை. அந்த ஜனாதிபதித் தேர்தலை சம்பந்தர் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டுக் காயங்களுக்கு ஊடாகவும் கூட்டு மனவடுக்களுக்கு ஊடாகவும் சிந்தித்து இருந்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருந்திருக்கும். அவருடைய இறுதி ஊர்வலத்தில், தந்தை செல்வாவின் ஊர்வலத்தில் திரண்டதுபோல ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்திருப்பார்கள்.

ஆனால் நாடாளுமன்றத்தில் ஒப்பீட்டளவில் அதிக தமிழ் ஆசனங்களுக்குத் தலைமை தாங்கிய ஒரு தலைவர் அரசியலைக் கணிதமாக மதிப்பீடு செய்யத் தவறினார்.முடிவுகளை விஞ்ஞானபூர்வமாக எடுக்கத் தவறினார். குறைந்தபட்சம் முடிவுகளை இதயபூர்வமாக எடுத்திருந்தால்கூட நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும். அன்று எடுக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகளின் விளைவுதான் இன்றுள்ள தமிழ் அரசியலாகும்.

இவ்வாறாக கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசியலில் எடுக்கப்பட்ட புத்திபூர்வமற்ற விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகள் அனைத்தையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றிப் பகுப்பாய்வு செய்யவேண்டும். தமது வாழ்வின் அன்றாட தேவைகளுக்காக சுண்டிப் பார்த்து பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், அரசியலிலும் அவ்வாறு சுண்டிப் பார்த்து முடிவெடுக்குமா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயமும், ஒழுகலாறும் சமூகத்தின் இரு கண்கள்

அ.ஹ.பர்ஹத்துஸ் ஸபா
கல்வி மற்றும் பிள்ளைநலத்துறை.
2 ஆம் வருட சிறப்புக் கற்கை
கிழக்குப்பல்கலைக்கழகம்

கல்வி என்பது அறியாமையை போக்கும் ஒரு கருவி. கல்வியைப் பணம் ஈட்டும் கருவியாகச் சுருக்கியது தான் இன்றைய நவீன கல்வித் திட்டத்தின் மாபெரும் சதியாகக் கருதப்படுகிறது. சங்க நூல்களிலும், அற நூல்களிலும், சமய நூல்களிலும் கல்வியின் அவசியம் பற்றி அழுத்திச் சொல்லப்பட்டுள்ளது. கல்வியானது தொழிற்கல்வியுடன் சேர்த்து வழங்கப்படவேண்டும். இன்றைய கல்வி, கருவியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லித்தருகிறது, ஆனால் எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லித்தருவதில்லை.

தொழில்நுட்பத்தில் மேன்மை அடைந்தால், பொருளாதாரத்தை பெருக்கினால் மனிதர்கள் நலமாகவும்,சுகமாகவும், அமைதியுடனும், இணக்கமாகவும், அன்புடனும் வாழமுடியும் என்று இன்றைய கல்வியாளர்கள் கருதுகிறார்கள். ஒரு துறை சார்ந்த அரைகுறை அறிவு எப்படிபட்ட நிலைக்கு அந்தத் துறையை கொண்டுசெல்லும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்கமுடியும். அரைகுறை அறிவு ஆபத்தானது. கல்வி என்பது வெறும் பாடங்களை கற்பிப்பது மட்டுமல்ல. ஒரு மனிதனை முழுமையாக வளர்ப்பதற்கான கருவியாகும். வகுப்பறையில் சமயம் மற்றும் ஒழுகலாற்றை கற்பித்தல் என்பது இந்த கருவியின் ஒரு முக்கியமான பகுதி ஆகும். அன்றாட வாழ்வில் மிக பொருத்தமானவற்றை தெரிவுசெய்யவும் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்க விருத்தி, சமயநெறி முதலிய நடத்தைகளை பொருத்தமுற பின்பற்றவும், சிறந்த விழுமிய பண்புகளை தம்வசப்படுத்திக் கொள்ளவும், உள்வாங்கவும் கல்வி துணைபுரிகிறது.

பாடசாலையில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயப்பாடங்களினூடாகவும், சமூகக்கல்வி பாடத்தினூடாகவும், வழிபாட்டு நிகழ்வுகளினூடாகவும் சமயமும், ஒழுகலாறும் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும், இலக்கியப்பாடங்களினூடாகவும், பாடசாலையில் ஒழுக்கத்தை போதிக்கும் கருத்தரங்குகளான போதை ஒழிப்பு, நல்ல தொடுகை - தீய தொடுகை பற்றிய விழிப்புணர்வு, சமயக் கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளினூடாகவும், தேசிய விழாக்களினூடாகவும் சமயமும், ஒழுகலாறும் வெளிப்படுத்தப்படுகின்றன. மாணவர்களின் நடத்தைகளுக்கு ஏற்ப நடத்தைச்சான்றிதழ்களை வழங்கல், சமூக சேவைதிட்டங்களினூடாகவும், ஒழுகலாறு வெளிப்படுத்தப்படுகின்றன. பாடசாலையில் உள்ள ஒழுக்காற்றுக் குழுக்களினூடாக ஒவ்வொரு மாணவனினதும் தனிப்பட்ட ஒழுக்கம்சார் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகளை பின்பற்றுவதிலுள்ள சிக்கல்களாக பல்வேறு மதங்கள் மதப் பன்மையால் ஏற்படும் சிக்கல்கள், மதத்தின் சார்புநிலை, அறிவியல் மாற்றம், சமூக நெருக்கடிகள், ஊடகங்களின் தாக்கம், குறுகிய நேரப்பாடவேளை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு மாணவனின் சமய ஈடுபாட்டை அதிகரிக்க பழங்காலத்தில் வாழ்ந்த சான்றோர்கள், ஞானிகள் செய்த நல்ல காரியங்கள், பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லலாம். இது மாணவர்களுக்கு சமயங்கள் பற்றிய பரந்த பார்வையை அளிக்கும். உதாரணமாக புத்தர், இயேசு போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துக்காட்டலாம். சமயம் நம் வாழ்வில் நல்லொழுக்கங்கள், நேர்மை, கருணை போன்ற நல்ல குணங்களை கற்றுத்தரும் என்பதை விளக்கலாம். இவ்வாறு மாணவர்களிடையே ஆன்மீக ஈடுபாட்டை வளர்ப்பதன் மூலம், அவர்களை சிறந்த குடிமக்களாகவும், சமுதாயத்துக்கு பங்களிக்கும் திறன்மிக்கவர்களாகவும் உருவாக்கலாம். சமயம் தொடர்பான தலைப்புகளில் விவாதங்களை ஏற்படுத்தி, மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்கவேண்டும். பல்வேறு சமயங்களின் நல்ல கூறுகளை மட்டும் எடுத்துக்காட்டி, மதச் சார்பின்மை குறித்து மாணவர்களுக்கு விளக்கவேண்டும். வகுப்பறையில் விதைக்கப்படும் ஒவ்வொரு சிந்தனையும், மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது. இன்றைய சமூகத்தில் ஒழுக்கக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையை மாற்ற, குழந்தைகளின் மனதில் சிறிய வயதிலிருந்தே நல்லொழுக்கத்தை விதைக்கவேண்டும். ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு நல்ல குடிமக்கள் மிகவும் அவசியம். நல்ல குடிமக்களை உருவாக்க, அவர்களுக்கு சிறந்த கல்வி அளிப்பதுடன், சமயம் மற்றும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்த வேண்டும். இதுதான் எதிர்கால சமுதாயத்தின் தேவை ஆகும். சமயமும் ஒழுக்கமும் ஒரு மாணவனின் வாழ்க்கையில் ஒரு தீபமாகத் திகழ்கிறது. இந்தத் தீபம் அவர்களின் இருளான பாதையில் ஒளி வீசி, அவர்களை சரியான பாதையில் வழிநடத்தும். வகுப்பறையில் இந்தத் தீபத்தை ஏற்றி வைப்பது ஆசிரியர்களாகிய ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

> இன்றைய சமூகத்தில் ஒழுக்கக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையை மாற்ற, குழந்தைகளின் மனதில் சிறிய வயதிலிருந்தே நல்லொழுக்கத்தை விதைக்க வேண்டும்.



பாகம் 2



# ஊர்ப்புதினம் 55

இராகவன்

ஒப்ரேசன் லிபரேசனில ஆமிக்காறர் சாய்ச்சுக் கொண்டுபோன பெடியள் முக்காவாசிப் பேரையும் கப்பலில பூஸாவுக்கேத்த இளையண்ணன் எப்பிடித் தந்திரமாத் தப்பிவந்தவன் எண்டதைப் பற்றி இந்தக்கிழமை பாப்பம்.

அப்ப அவன் இரண்டாந்தரம் ஏ.எல். சோதினையெழுதப் படிச்சுக் கொண்டிருந்தவன். அங்க ஆமிக்காறர் சாய்ச்சுக்கொண்டுபோன பெடியள் எல்லாரையும் ஓரிடத்தில விட்டுட்டு. படிக்கிறாக்கள் கையை உயர்த்துங்கோ எண்டு சொல்லியிருக்கிறாங்கள். அப்ப இளையண்ணன் கை உயர்த்தேல்ல. அதுக்குள்ள படிச்சுக்கொண்டிருந்த பெடியள் மட்டுமில்ல சும்மா ஊர்சுத்தித்திரிஞ்சாக்களும் கை உயர்த்தியிருக்கினம். பிறகு வேலை, "ஜொப், ஒப்பீஸ் ஆக்கள் கை உயர்த்துங்கோ" எண்டு சொன்னாப் போல ஒரு கொஞ்சப் பேர்தான் கை உயர்த்திச்சினம். அதில் இளையண்ணனும் ஒராள். எண்டாலும் ஆமிக்கு இவனில ஒரு டவுட். "என்ன ஜொப்?" எண்டு கேட்டிருக்கிறாங்கள். இவனும் யோசிக்காமல் "மேசன்! ஹவுஸ்மேக்கா! ஹவுஸ் மேக்கர்!"எண்டு சொல்லியிருக்கிறான். ஹவுஸ்மேக்கர் எண்டு ஏதோ அரசாங்க உத்தியோகம் இருக்காக்கும் எண்டு அவங்களும் நம்பியிட்டாங்கள். இவனோடு சேர்த்து உத்தியோகம், வேலையெண்டு கை உயர்த்தினாக்களை வீட்டை போகலாமெண்டு விட்டுட்டு, படிக்கிறாக்கள் முழுப்பேரையும் ஒருத்தர் கையில இன்னொருத்தர் கையைப் பிணைச்சு விலங்கு போட்டுக் கப்பல்ல ஏத்திட்டாங்கள்.

சாய்ப்பு நடந்து நாலாம் நாள் இளையண்ணனும் பருத்துறையிலயிருந்து பொடிநடையில வீடுவந்து சேந்தான். அவனைக்கண்டுட்டு அம்மா அறம்புறமாப் பேசத்தொடங்கிட்டா. "ஏன்ரா நாசமறுப்பானே! இஞ்சை ரெண்டு பேர் என்னோடயிருக்க நீ மட்டும் வெளியில கமாண் பாஞ்சுகொண்டுதிரியிறாய்? இப்ப என்ன நடந்ததெண்டு பாத்தியே! உன்னையும் அவங்கள் பூஸாவுக்கு கப்பல்ல ஏத்தியிருந்தால் தான் உனக்கு விளங்கியிருக்கும். ஏதோ நான் கையெடுத்த தெய்வங்களின்ர துணையால் தப்பினாய், இனிமேலாவது ஒழுங்கா வீட்டிலயிருந்து புத்தகத்தை எடுத்துப்படி" எண்டாப்போலை ரெண்டுமூண்டு நாள் நல்ல பிள்ளை மாதிரி வீட்டிலயிருந்தான். பிறகு பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில ஏறிட்டுது.

நான் ஒருக்கால் இளையண்ணனிட்ட," நீ உண்மையாய்ப் படிச்சுக்கொண்டு தானேயிருக்கிறாய். பிறகேன் வேலை செய்யிறதெண்டு கைஉயர்த்தினீ ? " எண்டுகேட்டேன். அவனும் சிரிச்சுக் கொண்டு "எடேய் லூசுக்கூழ்முட்டை! உனக்கு இதெல்லாம் விளங்காது. எண்டாலும் சொல்லுறன். அதுக்குள்ள நிண்டாக்களெல்லாம் படிக்கிறாக்கள் எண்டால் தங்களை விட்டுடுவாங்கள் எண்டு நினைச்சுத்தான் கையை உயர்த்தினவை. ஆனால் அவங்கள் என்ன நினைச்சிருப்பாங்கள் எண்டால் வேலை செய்யிறாக்கள் எண்டு கையை உயர்த்தினவை பொய்சொல்ல மாட்டினம் எண்டு. அதுதான் நானும் வேலை செய்யிற ஆக்கள் எண்டதுக்குள்ளை கை உயர்த்தினனான். விளங்குதோ? எண்டு சொன்னான்.

"ம்.... இன்னொரு டவுட்! மேசன் எண்டது சரி. ஆனால் ஹவுஸ் மேக்கர் எண்டால் என்ன? "

எண்டு கேட்டன். "எட லூசுப்பயலே வீடுகட்டுறவன் எண்டதைத்தான் ஹவுஸ்மேக்கர் எண்டு சொல்லுறது." எண்டு ஒருபொடி விளக்கந்தந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணாதிக்கக் கருத்துகளை தலைகீழாக்கும் 'பெண்ணின் மறுபக்கம்'



சொக்கலிங்கம் லோஜினி
ஊடக கற்கைகள் துறை
மூன்றாம் வருட மாணவி
யாழ் .பல்கலைக்கழகம்.

உளவியல் நிபுணர் மருத்துவர் ஷாலினி எழுதிய பெண்ணின் மறுபக்கம் என்ற நூலானது பெண்களின் வரலாற்றை ஆதிமுதல் அந்தம் வரை சொல்கிறது. ஆண், பெண் பாலியல் போராட்டங்களை ஆதி முதல் அந்தம் வரை ஒன்றும் விடாமல் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் மருத்துவர் ஷாலினி. இது இருபாலாரும் படிக்க வேண்டிய மிகச்சிறந்த புத்தகமாகும்.

உலகில் முதலில் தோன்றியது ஆண் தான். அவனுக்குப் பின் அவனுடைய துணையாகத்தான் ஒரு பெண் படைக்கப்பட்டாள். ஆகவே ஆணிலிருந்து தான் பெண் தோன்றினாள். உரிமைகளிலும் ஆணுக்குப் பிறகுதான் பெண். எனவே ஆண்தான் தலைவன் பெண் ஆணின் வேலையாள் மட்டுமே என்று நம்பி கொண்டிருப்பவர்கள் இந்த நூலை வாசித்த பின்னர் தங்களை சற்று மாற்றி கொள்வதற்கான மனநிலையை உருவாக்கிக் கொடுக்கும்.

ஆணாதிக்க சிந்தனையில் புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு இந்த நூலில் கூறப்பட்ட கருத்துகள் நிச்சயம் வெறுப்பை உண்டாக்கும். அவ்வாறான ஆணாதிக்க எண்ணத்தில் வாழ்ந்து கொண்டிருப்போரின் முகத்திரையை கிழிப்பதற்கு இந்நூல் சிறந்த ஆயுதமாக காணப்படுகின்றது.

ஆண் தான் மேலானன் பெண் தாழ்ந்தவள் என்றும் பல கதைகள் ஆதி காலத்தில் இருந்தே சொல்லப்பட்டு வருகின்றன. சொல்லப் போனால் இன்றைய காலகட்டத்திலும் கூட இச்சொல்லின் பிரயோகமும் பெண்களை அடிமையாக வைத்திருக்கும் தனமும் இன்றும் காணப்படுகின்றது. பெண்ணின் தலைமைப் பதவி ஆணிடம் எப்படி வந்தது? மீண்டும் அப்பதவியை பெண்ணுக்கு வழங்காமல் ஆண்களே ஏன் வைத்திருக்கின்றார்கள்? பெண்ணின் அறிவை அகற்ற எத்தனை உத்திகளை ஆண் பயன்படுத்துகின்றான்? பல கேள்விகள் எழுகின்றன. இவ்வாறான அத்தனை கேள்விகளுக்கும் முகத்தில் அடிக்குமாறு இப்புத்தகத்தில் பதிலளித்துள்ளார் நூலாசிரியர் ஷாலினி.

அனைத்து மத நூல்களும் ஆண்தான் பெரியவன் என்ற கண்ணோட்டத்தினையே வழங்குகின்றன. மத நூல்களின் முதல் பக்கத்தை புரட்டினாலே இதனைத் தெரிந்து கொள்ளலாம் என்ற நிலை வரும்போது டார்வின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு ஆணைவிட பெண் தான் உயர்வானவள் என்று சொல்வதை சுட்டிக்காட்டி இருக்கின்றார் ஷாலினி.

பெண் தான் ஆணை தேர்ந்தெடுக்கின்றாள். அந்தத் தேர்வில் வெற்றிபெறவே ஆண் விலங்குகள் பெண்ணை கவர தங்கள் உடலின் கவர்ச்சியை பரப்பி காட்டுகின்றனர். எப்படி ஒரு விவசாயி சிறந்த விதைகளை தேர்வு செய்து அதிக விளைச்சலை பெறுகின்றானோ அதேபோல எப்படி ஒரு குதிரை வியாபாரி வீரியமிக்க இரண்டு குதிரைகளை கலக்கவிட்டு அடுத்த தலைமுறையை உருவாக்க முயல்கின்றானோ அதுபோல தான் பெண்களும் ஆண்களிலேயே சிறந்தவர்களை தேர்ந்தெடுப்பதாக இந்த நூலில் சொல்லப்படுகின்றது.

மனிதர்கள் ஆரம்பத்திலிருந்து அதாவது கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரை தாய்வழி சமூகமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். அதன்பிறகு தந்தை வழிச் சமூகங்களாக மாறியிருக்கிறார்கள். இதனை பழங்கால தெய்வ வழிபாட்டை வைத்தே விபரிக்கிறது இந்த நூல். அப்போது பெண்கள் உடைமைகளைக் கொண்டு ஆள ஆண்கள் அவர்களது துணைவர்களாகவோ தளபதிகளாகவோ தான் வாழ்ந்திருக்கிறார்கள். அப்படி ஆட்சி புரிந்த பெண்களின் சரிவுக்குக் காரணம் வெறும் இரண்டு




உணர்ச்சிகள் தான் என்று ஷாலினி கூறுகின்றார். அவை யாவன ஒன்று பயம். இன்னொன்று பொறுமை. அவ்வுணர்ச்சிகள் எவ்வாறு பெண்களை கீழ்த் தாழ்த்தின. அதுவும் பெண்களை அடிமை நிலைக்கு எவ்வாறு கொண்டு சென்றன என்பதைப் பற்றியும் இந்நூல் மேலதிகமாக எடுத்தியம்புகின்றது.

பழங்குடியின மக்களில் பெண்தான் இன்றும் ஆளும் ராணி. ஆனால் நாகரிகமடைந்த இனத்தில் மட்டும் இது ஏன் நடப்பதில்லை. ஏன்? என்ற கேள்விக்கான விடைகளையும் இந்தப் புத்தகத்தில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். இவற்றினை வாசிக்கும் பொழுதே பெண்களின் வகிபங்கு எவ்வாறு இருந்தது? இன்றைய கால கட்டத்தில் பெண்கள் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர்? எவ்வாறான நிலையில் வைத்துப் பார்க்கப்படுகின்றனர்? என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. இப்புத்தகமானது ஆதாம்- ஏவாள் கதையை கடுமையாக விமர்சிக்கிறது. அவையெல்லாம் அடிப்படை அறிவியலற்ற கட்டுக் கதைகள் ஆகும். இன்று வரை பெண்களை அடக்கி வைப்பதற்கு பயன்படுத்தும் பிரதான உத்தியே அக்கதை என்பதை ஆணித்தரமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பிற்காலத்தில் தோன்றிய அல்பா ஆண்கள் யோசிக்க ஆரம்பித்ததுடன்தான் உலக வரலாறு மாறியது. பெண் என்ற ஒரே காரணத்துக்காக பெண்களை அடிமைகளை விட கேவலமாக நடத்தும் போக்கு அல்பா ஆண்களுக்கு பிடிக்கவில்லை. தான் பெரிய பலசாலி என்று அல்பா ஆண்கள் யோசித்ததனால் பலவீனமான பெண்கள் கஷ்டப்படுவதை அவர்களால் சகிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முயன்றார்கள். அதன் பின்னர் தான் பெண்களின் வரலாறு மாற ஆரம்பித்தது. பின்னர் பெண்களும் தமக்கு சுதந்திரமும் இருப்பதை உணர ஆரம்பித்தனர். அவர்களும் வெளியில் தமக்கு உரிமைகளைக் கேட்டு போராட ஆரம்பித்தனர் பின்னர் நிலைமை மாறியது என்கிறது இந்த நூல்.

எனவே பெண் ஏன் அடிமையானாள் என்பதையும் பெண்ணானவள் இவ்வுலகத்தில் ஆண்களுக்கு நிகராக வாழ்ந்து காட்டவேண்டும் என்ற ஊக்கப்படுத்தலையும் இந்நூல் பட்டவர்த்தனமாகவே வெளிப்படுத்துகின்றது. பெண் என்பவள் தோற்றுப்போனால் இந்த ஒட்டுமொத்த இனமுமே அழிந்துவிடும். ஆணும் சேர்ந்துதான் தோற்றுப்போவான் என்ற மிகவும் அழகான கருத்தை இந்தப் புத்தகத்தின் ஊடாக எமக்கு நூலாசிரியர் கூறியுள்ளார்.

# விராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



துமே இருந்திருந்தது என்பதை அந்தச் சேவையின் பயனாளிகள் நன்கு அறிவர். அதையே விராஜ் நியாயப் பிரசாரத்திற்கான தளமாகப் பயன்படுத்தினார் என்பதை மறுப்பதிற்கில்லை.

விராஜ் 17 வயதில் பிரித்தானிய இராச்சியத்துக்கு பொறியியல் மாணவனாக அனுமதி பெற்று வந்ததன் பின்னரே அவரது அரசியல் செயற்பாட்டுத் தளத்தில் மாற்றம் ஏற்படுகின்றது. இலண்டன் நகரம் விராஜிற்கு இன்னொரு யதார்த்தத்தை திறந்து விடுகிறது. அந்த நிறவெறி அல்லது மற்றமையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற யதார்த்தம் தான் அவரை அரசியல் மயப்படுத்துகின்றது. அவர் இடதுசாரிச் சிந்தனைக் குழுக்களுடன் இணைந்து தனது அரசியல் செயற்பாட்டுப் பயணத்தை ஆரம்பிக்கின்றார். நிறவெறிக்கெதிரான, ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்புக்கெதிரான போராட்டங்களை இலண்டனில் ஒழுங்குபடுத்துவதிலே மிக வினைத்திறனோடு செயற்படுகின்றார். அத்தோடு பிரித்தானிய இராணுவம் அயர்லாந்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னெடுத்து நியாயப் பிரசாரங்களை தான் முன்னெடுத்ததாகவும் அந்தக் காலப்பகுதியிலே தான் ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தை பிரித்தானியாவில் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஏனையவர்களுடன் சேர்ந்து ஆரம்பித்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

அவருடைய அரசியல் செயற்பாட்டுத்தளம் அவரது கல்வியை விடவும் முன்னுரிமை பெற்றது. அவரது நுழைவு அனுமதி (விசா) காலாவதியாகியிருந்தாலும் தொடக்கத்தில் அதைப் பொருட்படுத்தாமல் விட்ட குடிவரவுத்துறை, அவர் சார்ந்த அமைப்பு ஏறக்குறைய ஒரு கட்டத்தில் பதினைந்து நாடு கடத்தல் சம்பவங்களைத் தடுத்ததாகக் குறிப்பிட்டு, இறுதியாக பதினொரு வருடங்கள் கழித்து, 1989 இல், விராஜிற்கு ஐக்கிய இராச்சியத்தில் தங்கி இருப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. அவர் எந்நேரமும் நாடு கடத்தப்படலாம் எனும் நிலை உருவாகியது.

நாடு கடத்தலை தடுப்பதற்கான சட்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவியபோது ஆலயத்தில் அரசியல் தஞ்சம் கோரினார். ஆலயத்தின் மிகச்சிறிய திருப்பண்ட அறையில் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆலயத் திருப்பண்ட அறை நியாயப் பிரசாரத்திற்கும், சமூகத்தை கூட்டாக அணி திரட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டதை புதிய பிரசார உத்தியாக தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அந்த இடத்து மக்களே, அவருக்கான பாதுகாப்பு ஒழுங்குகளையும் பிரசார ஒழுங்குகளையும் முன்னெடுத்து பிரித்தானிய குடிவரவுத் துறையிடமிருந்தும், காவல்துறையிடமிருந்தும் காப்பாற்றியிருந்தார்கள். பிரித்தானிய காவல்துறை, பாதுகாப்பு வலயங்களை உடைத்தெறிந்து, 1989 தை 18 அதிகாலையில் அவரைக் கைது செய்து நாடு கடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது. விராஜ் கைது செய்யப்பட்ட வேளை தன்னை அவர் சூடாக்கியுடன் சங்கிலி மூலம் பிணைத்திருந்தார். அதை உடைத்து பிரித்தானிய காவல்துறை அவரைக் கைது செய்தது. அதே தருணத்தில் அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தையும் குடிவரவுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருந்தார். 1989 இல் பிரித்தானிய அரசு அவரை சிறிலங்காவிற்கு நாடு கடத்தியிருந்தது.

சிறிலாங்காவிலிருந்து மீண்டும் அரசியல் தஞ்சம் கோரி, ஜேர்மனியிலிருந்த தனது ஈழத்தமிழ் விடுதலைக்கு வலுச் சேர்க்கும் செயற்பாடுகளையும் ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

2010 இல் அவரைப் பாதுகாத்த ஆலயக் குரு இறந்தபோது அவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள பிரித்தானிய குடிவரவுத்துறை அவருக்கு அனுமதியை மறுத்திருந்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக ஜேர்மனியில் தங்கியிருந்து சர்வதேச அரசியல் செயற்பாட்டுத் தளத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானது. விராஜ் விட்டுச் செல்லும் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதே நாம் அவருக்குச் செலுத்துகின்ற அஞ்சலியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.வி.தவராசா

# 3 குண்டுவெடிப்புகளும் ஒப்புக்கொள்ளாத குற்றங்களும்

கொழும்பில் 2007 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மூன்று பெரும் குண்டுவெடிப்புச் சம்பவங்களிலும், இராணுவ அதிகாரிகளின் மரணத்திலும் தொடர்புடையவரென 07.04.2008இல் கொட்டாஞ்சேனை பொலிஸாரினால், பத்மநாதன் ராஜீவ் என்பவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பத்மநாதன் ராஜீவ் ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் வெளிநாடு செல்வதற்காக கதிரேசன் வீதியில் அமைந்துள்ள அடுக்கு மாடி வீட்டில் தங்கியிருந்த வேளையிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

(1) 24.05.2007இல் புறக்கோட்டை றெக்ளமேசன் வீதி முதலாம் குறுக்குத் தெருவில் பஸ்ஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டு 15 பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

(2) 30.12.2007 இல் கொம்பனித்தெரு குண்டுத் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதோடு 10 பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

(3) 30.07.2008 இல் கொழும்பு மோதரையில் புலிகளின் தற்கொலை குண்டுதாரியினால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிஸார் உட்பட ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

ஆகிய சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொலிஸாரினால் ராஜீவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன

இந்தத் தொடர் குண்டு வெடிப்புகள் மற்றும் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து 27 இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். அவர்களில் 10 ஆவது சந்தேகநபரே ராஜீவ்.

பத்மநாதன் ராஜீவை கைதுசெய்த பொலிஸார் இந்தக் கைதினைத் தொடர்ந்து சந்தேகநபரான பத்மநாதன் ராஜீவின் இல்லத்தில் தண்ணீர்த் தொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி - 56 துப்பாக்கி ஒன்று, ரி-56 துப்பாக்கிக்கான நான்கு மகசின்கள், குண்டுகள், 115எஸ்.எம்.ஜி. லோஞ்சர் துப்பாக்கி ஒன்றும் அதன் குண்டுகளும் 194 பற்றரிகள், சீ-4 மருந்து ஐந்து கிலோ என்பவற்றைக் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்ட பத்மநாதன் ராஜீவ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, பொலிஸாரினால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். பின்னர் புதுக்கடை பிரதான நீதிவான் நீதிமன்றம், புதுக்கடை மேலதிக நீதிவான் நீதிமன்றம், கோட்டை நீதிவான் நீதிமன்றங்களில் அவர் மீதான விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.

## குற்றச்சாட்டுப் பத்திரங்கள்

(1) கொம்பனித்தெரு நிப்பொன் ஹொட்டலுக்கு அருகாமையில் குண்டுத்தாக்குதலை நடத்தி 30.12.2007இல் லெப்டினட் திசாநாயக முதியாச லாகே திசாநாயகாவுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக பல இடங்களில் ஆயுதங்களையும் தற்கொலை அங்கிகளையும் மறைத்து வைத்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 2(1) பிரிவின் கீழ் 20 ஆண்டுகள் தண்டனை வழங்கக்கூடிய ஒரு குற்றச்சாட்டுப் பத்திரமும்....

(2) கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆனந்த வர்மன், விஜயன் ஆகியோருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததோடு, ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டமையை நன்கு தெரிந்து கொண்டும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கவில்லையென ஒரு குற்றச் சாட்டுப் பத்திரமும்

- என இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இரண்டு வழக்குகள் சட்டமா அதிபரினால் பத்மநாதன் ராஜீவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.



## குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

கொம்பனித்தெரு நிப்பொன் ஹொட்டலுக்கு அருகாமையில் குண்டுத்தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு அரசதரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே சான்று எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதெனக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமேயாகும். எதிரியினால் சுயவிருப்பத்தில் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டு அரச தரப்பின் முக்கியமான சான்றாக சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அழகான தமிழில் பத்துப் பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது. எதிரி தான் புரிந்த குற்றங்கள் பற்றிய முழு விவரங்களையும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் 30.12.2007 இல் கொம்பனித் தெரு குண்டுத் தாக்குதலில் தான் பங்குபற்றியதாகவோ அல்லது தாக்குதலை நடத்திய புலிகள் இயக்கத்தை சார்ந்த ஆனந்த வர்மன், விஜயன் ஆகியோருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாகவோ லெப்டினட் முதியானசலாகே திசாநாயகாவுக்கு மரணத்தை ஏற்படுத்தியதாகவோ குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்தவிடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

எதிரியினால் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பில் தனக்கு வழங்கப்பட்டதாக அந்த வாக்குமூலத்தை ஒப்புறுதிப்படுத்தி கையெழுத்திடவேண்டும். ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் [illegible] ஒப்புறுதிப்படுத்தி கையெழுத்திடவில்லை என்பதையும் தனது சாட்சியத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார். ஒப்புறுதிப்படுத்தப்படாத ஒப்புதல் வாக்குமூலம் சட்டவலுவற்ற வாக்குமூலமாகும் என்பதுடன் குற்ற ஒப்புதல் வாக்குமூலமென அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட ஆவணத்தில் எதிரி எந்தவிதமான குற்றத்தையும் தான் புரிந்ததாக ஒப்புதல் அளிக்கவில்லை. சட்டமா அதிபரினால் எந்தச் சான்றுகளும் அற்ற நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இந்த வழக்கின் குற்றச்சாட்டை நிரூபிக்க அரச தரப்பால் வேறு எந்தவிதமான சான்றும் முன்வைக்கப்படவில்லை என்பதை நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தோம். அதனையடுத்து எதிரியான பத்மநாதன் ராஜீவ் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

## ஒத்திவைக்கப்பட்ட தண்டனை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5(1)ஆம் பிரிவின் தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தைப் புரிந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது மேல் நீதிமன்ற நீதிபதி மொறாயஸ் எதிரியிடம் 'குற்றத்தை ஒத்துக்கொள்ளத் தயாரா?' என வினவினார். அப்போது எனது சமர்ப்பணத்தை முன்வைத்தேன்.

"தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது பற்றியோ விடுதலை சம்பந்தமாகவோ பாதுகாப்புச் செயலாளர் மட்டுமல்லாது நீதி அமைச்சர் அல்லது சட்டமா அதிபர் என எவருமே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. காலத்துக்குக் காலம் பதவியில் இருப்பவர்கள் கைதிகளுக்கு வாக்குறுதிகளை வழங்கி விடுகின்றார்கள். அதனை நம்பி கைதிகளும் தங்களுக்கு பிணையோ அல்லது புனர்வாழ்வோ விடுதலையோ கிடைக்கும் என நம்பி பின்னர் ஏமாந்து விடுகின்றனர். ஆனால் இன்றுவரை ஒன்றும் நடைபெறவில்லை. நீதிமன்றத் தீர்ப்புகளால் மட்டுமே அரசியல் கைதிகளின் எதிர்பார்ப்புகள் நிறைவேறியுள்ளன.

அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல பத்திரிகையாளர் மாநாட்டில் 12ஆயிரம் கைதிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாகவும் விடுதலை செய்யப்பட்டவர்களில் கொலைக் குற்றம் புரிந்தவர்களும் உள்ளடங்கியுள்ளனர் எனவும் கூறியுள்ளார். ஆனால் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்களில் இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் என பலநூற்றுக்கணக்கானோர் பல வருடங்களாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சில கைதிகள் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரவேண்டும் என்பதனாலேயே இந்த விவரங்களை இங்கே முன்வைக்கின்றேன்.

இந்த வழக்கில் ஆயுதங்களை தமது வீட்டில் மறைத்து வைத்த சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்கத் தவறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எதிரியின் வயதான தாயாருக்கு எதிரி ஒரேயொரு ஆண் பிள்ளையென்பதுடன் எதிரி இருதய நோயால் பாதிக்கப்பட்ட 30வயது இளைஞராவார். எதிரி சிறையில் கழித்த காலத்தைக் கருத்திற்கொண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்குங்கள்"




என்று எனது சமர்ப்பணத்தில் நீதி மன்றத்தை வேண்டிக் கொண்டேன். இதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி மொறாயஸ் எதிரிக்கு ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை வழங்கினார். இதனையடுத்து பத்மநாதன் ராஜீவின் ஆறுவருட சிறைவாழ்க்கை முடிவுக்குவந்து, அவர் 2014 ஆம் ஆண்டு விடுதலையானார்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு விரல் புரட்சி

கணேஸ்குமார் மதியந்தி
ஊடககற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைகழகம்.

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சியைக் கொண்ட ஜனநாயக நாடான இலங்கையானது ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பின் கீழ் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. பல்கலாசார நாடான இலங்கையானது பல நூற்றாண்டு காலமாக தனது வளங்களை உறிஞ்சி பருத்து வளர்ந்திருந்த அந்நிய அதிகார சக்திகளின் கையாளலுக்கு உட்பட்டமையினால் தனது எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறான முன்னேற்றத்தை எட்டமுடியவில்லை.

1948.02.04 ஆம் திகதி சுதந்திரம் அடைந்த இலங்கையானது 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பிற்கிணங்க பிரதமரை ஆட்சித் தலைவராக கொண்ட ஆட்சி முறையினை ஒழித்து , அதற்குப்பதிலாக சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது .

இதற்கமைய 9 ஆவது ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்காக செப்ரெம்பர் 21 ஆம் திகதி வாக்களிக்கவுள்ளோம். இதுவரை காலமும் இல்லாத வகையில் இம்முறை 39 போட்டியாளர்களைக் கொண்டதாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. இது தொடர்பாக மக்களுடைய கவனம் அவர்களின் எதிர்பார்ப்பு எப்படி உள்ளது என்பது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள நாவாந்துறை எனும் கிராமத்தினை நேரடியாகச் சென்று அங்குள்ள மக்களுடைய அபிப்பிராயங்கள் பெறப்பட்டன.

நாவாந்துறை என்பது கடற்றொழிலை மையமாகக் கொண்ட ஓர் அழகிய கிராமம். இங்கு ஜே/85 கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் சுமார் 780 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தப்பகுதியில் இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களே அதிகம் வாழ்கின்றனர். கிட்டத்தட்ட 2000 வாக்குகள் இக்கிராமத்தில் காணப்படுகின்றன. இங்குள்ள குடியமைப்புகளும் அவர்கள் வாழக்கூடிய சூழலையும் பார்த்தாலே அது அவர்களின் தேவையினை கூறிவிடும். இப்படிப்பட்ட சூழல் தாக்கத்துக்கு தினந்தோறும் முகம் கொடுத்து வரும் நாவாந்துறை மக்களினுடைய வாழ்க்கையானது பெரும் சவாலுக்கு உரியதே. அந்த மக்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் என்ன சிந்திக்கிறார்கள்?

**எஸ். மரியதாஸ்**

*(தலைவர், நாவாந்துறை கடற்றொழிலாளர் சங்கத்தலைவர்)*

" இதுவரைகாலமும் அரசியலிலும் ஆட்சியிலும் என்ன மாற்றங்கள் நடந்தாலும் அதில் எங்களுக்கு எவ்விதமான சாதகமும் இதுவரை காலமும் நடைபெறவில்லை. தேர்தல் என ஆரம்பிக்கும்போது காண்கின்ற முகங்களை தேர்தல் முடிந்த பின் காணவே முடியாது. ஆதலால் நாங்கள் இம்முறை எவ்வித எதிர்பார்ப்பும் கொண்டிருக்கவில்லை. எதிர்பார்ப்பின் பெயரால் எங்களுக்கு கிடைப்பது வெறும் ஏமாற்றமே."

" நாட்டின் ஆட்சிக்கு யார் வந்தாலும் அவர்கள் எங்களுக்கு சோறு போட போவதில்லை. ஆட்சிக்கு யார் வந்தாலும் எங்களுக்கான உரிமை கிடைக்கப்போவதில்லை. எவ்விதமான சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கப்போவதில்லை. மக்களுக்கு இருந்ததைவிட வரிச்சுமைதான் கூடிக் கொண்டே செல்கின்றதே தவிர வேறு எவ்விதமான சுதந்திரமும் கிடைக்கப்போவதில்லை. ஆதலால் ஆட்சிக்கு யார் வந்தாலும் எங்களுடைய நாவாந்துறை கிராம தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் பெரிதும் நாட்டம் கொள்ளமாட்டார்கள். யுத்தம் இடம்பெற்ற நாட்களில் இருந்து இதுவரை காலமும் நாங்கள் பெரும் சவால்களுக்கு மாத்திரமே முகம் கொடுத்து வருகின்றோம். அதனால் யாரையும் நாங்கள் நம்பப் போவதுமில்லை, எதிர்பார்க்கப்போவதுமில்லை. நாங்கள் வாக்களித்து எங்களுக்கு என்ன கிடைக்கப்போகின்றது ?"

**பேதுருபிள்ளை சகாயசீலன்**

*(கிராமவாசி)*

"எங்களுக்கு விருப்பு வாக்கு தொடர்பான தகவலெதுவும் இன்று வரையும் கிடைக்கப்பெறவில்லை. அப்படிக் கிடைத்தாலும் நாங்கள் வாக்களித்து என்ன மாற்றம்வரபோகின்றது ? யாழ்ப்பாணத்தில் நான்கு லட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரத்து எண்பது வாக்குகளும் கிளிநொச்சியில் ஒரு இலட்சத்து தொள்ளாயிரத்து ஏழு பேரும் என கிட்டத்தட்ட ஆறு லட்சம் வாக்குகள் உள்ளன.

அதேபோல வன்னி மாவட்டத்தில் வவுனியாவில் ஒரு இலட்சத்தில் இருபத்தொன்பதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தைந்து வாக்குகளும் மன்னார் மாவட்டத்தில் தொண்ணூறாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து வாக்குகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் எண்பதாயிரத்து எண்ணூறு வாக்குகளுமாக வடமாகணத்தை பொறுத்தவரையில் மொத்தம் ஒன்பது இலட்சம் தமிழ் மக்களினுடைய வாக்குகள் உள்ளன.

இந்த வாக்குகளை வைத்து தான் இனி நாங்கள் தீர்மானிக்க வேண்டும் . எங்களுக்கான காணித்திட்டத்தினை தருவோரை நாம் ஆதரிப்போம். அத்தோடு எங்களது உரிமையினையும் அவர்கள் பாதுகாக்க வேண்டும்.

இந்த இருவரின் குரல்களும் ஒருவகை மாதிரிதான். நாவாந்துறை மக்கள் பெரும்பாலானோரின் மனநிலை கிட்டத்தட்ட இதே அலைவரிசையிலேயே உள்ளதால், மீளமீள ஒரே கருத்தைச் சொல்வதைத் தவிர்க்கும் பொருட்டு ஏனையோரின் கருத்துகள் இங்கு தரப்படவில்லை, அந்த ஊர் மக்களைப் பொறுத்தவரையில் வாக்களிப்பதில் பெரும் ஈடுபாடு காட்டாத தன்மையையும், வாக்குரிமையின் பலத்தை புரிந்துகொள்ள தவறும் போக்கினையும் காணமுடிகிறது. ஆனால் வாக்குரிமை என்பது ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமை .

அந்த உரிமையினை சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். அது ஒவ்வொரு பிரஜையினினதும் அடையாளம் என்பதை நாம் மனதில் நிறுத்தி செயற்பட வேண்டும். ஒவ்வொரு வாக்கும் நாட்டின் தலையெழுத்தையே மாற்றலாம். ஆதலால் உரிமையினை கையில் எடுத்து உறுதியோடு போராடுவதே எமக்கு முன்னுள்ள தெரிவு.

எங்களால் முடியாதது என ஒன்றும் இல்லை என்பதனை மனதில் நிறுத்தி , மக்கள் சிந்தித்து வாக்களிக்க முன்வர வேண்டும்.

மாற்றம் இனி உங்கள் கையில்...!

**ஒவ்வொரு வாக்கும் நாட்டின் தலையெழுத்தையே மாற்றலாம்.**

**உரிமையினை கையில் எடுத்து உறுதியோடு போராடுவதே எமக்கு முன்னுள்ள தெரிவு.**

**உரிமையினை சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்: 8

## க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

## பிறந்தநாள் கொண்டாடுவது என்பது நாங்கள் அறியாதது!

பா.துவாரகன்

### பட்டங்கள், விருதுகள் இரந்து பெறுவன அல்ல!

**உமாமகேசுவரன்:**

அப்போது நான் இளைஞன். தெல்லிப்பழையில் ஓர் ஆலயத்தில் திருவிழாவுக்கு என்னைப் பேசுவதற்கு கூப்பிட்டார்கள். ஆலய உற்சவம் நடைபெற்ற பத்துத் தினங்களும் என்னுடைய சொற்பொழிவு; கடைசி நாளன்று எனக்குப் பட்டம் தர விரும்பினார்கள். கோயில் குருக்கள், "நாளை உங்களுக்குப் பட்டம் தரப்போகின்றோம்" என்று என்னிடம் கூறினார்; நான் புளுகத்துடன் வீட்டுக்கு வந்து அப்பாவிடம் கூறினேன். அப்பா, "எடே, நீ பட்டம் வாங்கப் போகக் கூடாது" என்றார். "பட்டம் தருவதென்றால் தருகின்றவர்கள் உன்னிலும் கல்வியறிவொழுக்கங்களில் உயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். பல்கலைக்கழகம் அல்லது ஒரு ஆதீனம் தான் ஒருவருக்கு பட்டம் கொடுக்கலாம்; ஒரு வித்துவ சபையும் பட்டம் வழங்குவதற்குத் தகுதியுடையது" என்றார்.

அன்று பட்டம் வாங்குவதற்குச் செல்லாதது எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. "அப்பா எனும் தெய்வம்" எங்களை இவ்வாறு நெறிப்படுத்தினார். (இவற்றை நினைவு கூர்ந்த போது உமாமகேசுவரனது கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.)

**உமாமகேசுவரன்:**

நான் இந்தியாவில் தருமபுர ஆதீனத்தில் திருமுறைப் பதிப்புப் பணியில் ஈடுபட்ட காலம். அப்போது இருந்தவர் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். சந்நிதானம் எனக்குக் கடிதம் எழுதும் போது வித்துவான் உமாமகேசுவரனுக்கு என்று அடைமொழியிட்டு எழுதுவார். நான் ஆதீனத்தை சந்திக்கின்றபோது "சுவாமி அடியேன் வித்துவான் பரீட்சை எடுத்ததில்லை. கடிதத்திலே எனது பெயருக்கு முன்னால் வித்துவான் என்று அடைமொழியிட்டு எழுதுகிறீர்களே" என்றேன். "ஒருவருக்குப் பட்டம் வழங்கும் தகுதி ஆதீனத்துக்கு இருக்கிறது" என்று திருவாய் மலர்ந்தார் குருமகா சந்நிதானம்.

**கட்டுரை ஆசிரியர்:**

கலாநிதி, வித்துவான், பண்டிதர், புலவர் முதலான பட்டங்களை சமூக அமைப்புகள், வியாபார நிலையங்கள் முதலான இன்னோரன்ன அமைப்புகள் வழங்கமுடியாது. பல்கலைக்கழகங்கள், வித்துவ சபைகள் ஒருவரைப் பரீட்சித்து, பரீட்சையிலே சித்திபெற்றவருக்கே இவற்றை வழங்கும் தகுதியுடையன. ஒருவரது கல்விப்புலமை சார்ந்தும் ஆற்றிய சமூகப் பணியைக் கருத்திற்கொண்டும் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கும் தகுதி பல்கலைக்கழகம் ஒன்றுக்கே உரியது. அதேபோல் அரச விருதுகளான கலாகீர்த்தி, தேசமான்ய, ஸ்ரீலங்கா அபிமானய (தேசத்தின் தவப்புதல்வன் அல்லது தவப் புதல்வி) முதலானவற்றை ஒரு அரசு(State) தான் வழங்கமுடியும் என்பது சிறியேனது தாழ்மையான கருத்து. மொழி மட்டுமே எங்களிடம் உள்ளது. சொற்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அதிலும் பொன்னுக்கு நிகரான மங்கலச் சொற்களை உலக வரைபடத்தில் குறிக்கவும் ஈழத்தில் சுதந்திரம் இல்லை. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று சங்ககாலப் புலவன் கணியன் பூங்குன்றனார் பாடிய மொழியின் சொற்களை, பண்பாட்டை நாம் அர்த்தமிழந்து போகச் செய்தலாகாது.

### காணாமற் போன 'வாணி நிகேதன வாசிகசாலை'

**உமாமகேசுவரன்:**

அப்பா(கதிரிப்பிள்ளை), தான் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த உடனே வீட்டிலே ஒரு வாசிகசாலை அமைத்தார். அதற்குப் பெயர் "வாணி நிகேதன வாசிகசாலை". வாசிக்க விரும்புபவர்கள் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போவார்கள். அப்பா ஒருவரிடமும் காசு வாங்குவதில்லை. பெரும்பாலும் புத்தகத்தைக் கொண்டு போனவர்கள் திரும்பக் கொணர்ந்து தருவதில்லை. கொஞ்சநாளில் அலுமாரி வெறுமையாகியது. அப்பாவிடம் கலைமகள் 12 தொகுப்பு இருந்தது. அப்பா சுப்பிரமணிய புத்தகசாலையில் தான் புத்தகம் வாங்குவார். அப்பா ஓய்வு பெற்ற போது அப்பாவுக்குக் கலைக்களஞ்சியம் முதலாவது தொகுதியை பன்னாலை சனசமூக நிலையம் அன்பளிப்பாக வழங்கியது. இரண்டாவது தொகுதி வெளிவந்ததும் அதனை சுப்பிரமணிய புத்தகசாலை அதிபர் அப்பாவுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

எனக்கு வாசிப்பில் ஈடுபாடு ஏற்படுத்தியதும் அப்பா தான். கல்கியின் நூல்களை வாசிக்கக் காரணமாக இருந்தவரும் அவரே. எனக்குக் கல்கியில் ஈடுபாடு ஏற்பட்டதற்குக் காரணம், கல்கி நாவல் மட்டுமன்றி சங்கீத விமர்சனம், கட்டுரைகள், அநுபவக் கட்டுரைகள், திரைப்பட விமர்சனம் என்று பல துறைகளில் எழுதுவதும் சுவைபடச் சொல்லும் அவரது மொழிநடையும் காரணங்கள். "மூன்று மாதக் கடுங்காவல்" கல்கி



பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை
ஆதாரம்: குடும்ப புகைப்படத் தொகுப்பு



பண்டிதர் க. உமாமகேசுவரன்

திருச்சி சிறையிலிருந்த போது எழுதியது. அப்பாவின் நூலகத்திலிருந்தது. கல்கி சிறையனுபவத்தை சுவைபடச் சொல்வார். கல்கியோடு ராஜாஜி முதலான காந்திய வாதிகளும் சிறையிருந்தனர்.

கல்கி ஆனந்த விகடனில் இருந்த காலத்தில் அப்பா ஆனந்த விகடன் எடுத்திருக்கிறார். கலைமகள் எடுத்திருக்கிறார். இந்தியாவிலிருந்து ஐயர் ஒருவர் வந்து சந்தா பெற்றுச் சென்று தபாலில் வீட்டுக்கு அனுப்புவார்.

பி.ஏ. பட்டதாரியான கே. சுப்பிரமணியம் புதுவிதமாய்ப் படம் எடுக்கவேண்டும் என்று விரும்பி கல்கியிடம் கேட்கின்றார். கல்கி தியாகபூமி கதைவசனத்தை எழுதிக் கொடுத்துவிட்டு தியாகபூமி என்ற வரலாற்றுப் புதினத்தை ஆனந்த விகடனில்(1938-39) தொடராக எழுதுகிறார்.

சிவகாமியின் சபதம் தொடங்கியபோது அப்பா வீட்டுக்குக் கல்கி இதழைக் கொண்டு வந்தார். சிவகாமியின் சபதத்தை வாசிக்கும்போது அப்பா உணர்ச்சி வசப்படுவார்; கண்ணீர் வரும்; அழுவார்; பேப்பர் எடுத்து எழுதி வைப்பார்.

### கந்தபுராணத்தில் ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்த பெண்!

**பின்வருவது 2022/10/16 அன்று உமாமகேசுவரன் தம்பி ஜெகதீசுவரனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி:**

ஒரு காலை வேளை. அப்பா எங்கோ புறப்படுகிறார். செருப்புகளை வாசலின் ஒருபுறத்தில் வைக்கிறார். கைப் பிரம்பை எடுத்து, நேற்றைய செய்தித்தாளின் கிழித்தெடுத்த துண்டினால் பொலிஷ் பண்ணிவிட்டு ஒரு ஓரமாகச் சார்த்துகிறார். உடுத்திருக்கும் நாலு முழத்தை உரிந்து அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கூடையுள் [illegible] 'புள்ளி [illegible]' [illegible] பிறிதொரு நாலு முழத்தை உருவி உடுத்துக் கொள்கிறார். மேஜை லாச்சியை இழுத்துத் தமக்கெனப் பிரத்தியேகமாய் வைத்திருக்கும் சிறிய சீப்பினால் தலையை வாருகிறார்; எழுந்து வாசலுக்கு வருகிறார். பாதங்களை ஒன்றுமாற்றி ஒன்றாய்ச் செருப்புள் நுழைக்கிறார். கொடியிலே தொங்கும் உத்தரியத்தை உருவித் தோளின் இருபுறமும் தொங்கும் வண்ணம் விசுறுகிறார். கையிற் பிரம்பை ஏந்தியவர் ஞானவைரவ சுவாமி எழுந்தருளும் திசைநோக்கித் திரும்புகிறார். ஏதோ மானசீகமாக வேண்டுகிறார். "பிள்ளையள் போட்டுவாறன்." அவ்வளவுந்தான். அவர் புறப்பட்டுப் போகிறார்.

ஒருவர் புறப்படும்போது "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்கக் கூடாதென்பது எங்கள் வீட்டின் "எழுதாக் கிளவி"(வேதம்). எனவேதான் எவரும், எதுவும் கேட்கவில்லை.

காலை மணி ஒன்பதுக்குப் போனவர் மதியம் மணி பன்னிரண்டுகுத்தான் திரும்பினார். "எடே! தம்பீ நான் எங்கை போட்டு வாறன் எண்டு தெரியுமே?" எண்டு கேட்டார்.

"எங்கையோ கிட்டடிக்குத்தான் போட்டு வாறியள் எண்டு தெரியும். எங்கையெண்டது தெரியாது."

"கந்தபுராணத்திலை ஒரு சந்தேகம். ஆரிட்டை இதுக்கு விளக்கம் கேக்கலாம் எண்டு நினைச்சுப் பாத்தன். உன்ரை பெரிய கொப்பற்றை நினைவு வந்துது."...... "எனக்குக் கந்த புராணத்திலை சந்தேகம். ஆரிட்டைப் போகலாம் நீ சொல்லு".

"**கனகன்னையின்ர அப்பு**[1]' விட்டைத்தான் போக வேணும்."

"அவருக்கும்சொல்லமுடியேல்லை. யோசிச்சுவையுங்கோ." எண்டிட்டு வெளிக்கிட ஆயத்தமானன். குசினியில் இருந்து ஒரு குரல் ஒலித்தது! "கொஞ்சம் பொறுங்கோ ரீ கொண்டு வரப்போறன்!"

ரீயோடை வந்தவள் **அம்மாப்பிள்ளை**[2]. ரீயைத் தந்திட்டு நாங்கள் பினைஞ்சு களைச்ச விஷயத்தை அச்சு வேறு, ஆணி வேறாய்ப் பிரித்து விளக்கித் தள்ளிவிட்டாள். நாங்கள் இருவரும் திகைத்துப்போனோம்! "எப்பிடி மோனை உனக்கு இதெல்லாம் தெரியும்?" எண்டு நான் கேட்டன். "நீங்கள் தான் படிப்பிச்சனீங்கள்" எண்டாள்.

"மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன்" எண்டு சுவாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்துப் பாயிரத்தில சொன்னதுதான் நினைவுக்கு வந்துது. "எனக்கும் பெரிய கொப்பருக்கும் நல்ல புளுகம்."

மேலே கடிதத்திலே உமாமகேசுவரன் குறிப்பிட்ட சம்பவம், உரையாடல் 1956 இற்கு முன்னர் நடைபெற்றது. இந்நிகழ்வை 2022 ஆம் ஆண்டு, 87 ஆவது வயதில் மீட்கும் உமாமகேசுவரனது நினைவாற்றலும் விழிசிட்டியிலே அவர்கள் இருந்த வீட்டிலிருந்து தந்தையார் பண்டிதர் கதிரிப்பிள்ளை புறப்பட்டதை உரைச் சித்தரமாக வரையும் அவரது உரைநடையழகும் நோக்கற்பாலது. அடுத்தது அந்தக்காலத்தில் கந்தபுராண உரையைக் கேட்டது மட்டுமன்றி அதிலே ஏற்பட்ட சந்தேகத்துக்கு தக்கநேரத்தில் விளக்கமளிக்கவல்ல அம்மாப்பிள்ளை என்ற அக்காலப் பெண்ணின் கல்வியறிவும் எமக்கு வியப்பூட்டும்.

**உமாமகேசுவரன்:**


பிறந்த நாள் கொண்டாடுவதென்பது நாங்கள் அறியாதது. ஆனால் எங்கள் பிறந்த நாள்களில் ஏதாவது ஒரு புத்தகம் எமது வயதுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்றதாக வழங்குவது அப்பாவின் வழக்கம், மே மாதம் ஐந்தாம் திகதிகளில் அப்படி அவர் எனக்கு வழங்கிய புத்தகங்களை இன்று பார்க்கும் போது படிமுறையில் அவர் தேர்ந்து வழங்கிய பாங்கை எப்படிப் பாராட்டுவதென்று தெரியாமல் திகைக்கிறேன்- அதிதீரன்

**அடிக்குறிப்புகள்**

1. ஆறுமுகம் சட்டம்பியார் - கனகன்னையின்ர அப்பு
2. கதிராசிப்பிள்ளை (மகள்) - அம்மாப்பிள்ளை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## விளையாட்டுப் போட்டியும் பரிசில் வழங்கலும்



யாழ்ப்பாணம், செப்.1

வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியும், பரிசில் வழங்கலும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் சுழிபுரம் விக்டோரியன் கழகம் முதலிடத்தையும், மூளாய் விக்டோரி அணி இரண்டாம் இடத்தையும் பெற்றதுடன் நினைவுச் சின்னங்களும், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார்.

([illegible]-45-20)



## சாரணர் தலைவர் பயிற்சிநெறி

வவுனியா, செப்.1

வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரியர்களுக்கு சாரணத் தலைவர்களுக்கான கலைக்கூறு - 1 பயிற்சி வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கடந்த இரு தினங்கள் நடைபெற்றது.

(ஒ-ரி-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- பாலச்சந்திரன் சுரேஸ்
விண்ணப்பதாரர் பெயர் :- பாலச்சந்திரன் சுரேஸ்
முகவரி :- அளவெட்டி மேற்கு. அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19. வல்லை சங்கானை வீதியில் ஆதன இல. 668 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "சாமத்தியன்கடல் என்ற ஆதனம் C. இரங்கநாதன் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 30.03.2016 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் பா. சுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் இலக்கம் 9880 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியாலும் 31.05.2016 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் இலக்கம் 5592 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியாலும் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளின் தாய் உறுதிகளில் ஒன்றான 14.07.2003 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிசு சித்ரல் ஜெயந்தடி சில்வா அமரதுங்க முகதாவில் 4152 ஆம் இலக்க உறுதியில் ரங்கநாதன் சிறிநிவாசன் என்பவரால் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அளவெட்டி கிராமத்தில் அமைந்துள்ள "சாமந்தியக்கடல்" எனும் ஆதனம் தனது தந்தையார் செல்லையா ரங்கநாதனின் தந்தையார் வல்லிபுரம் செல்லையாவின் உடமையில் ஆட்சி செய்யப்பட்டு வந்ததெனவும் அவர் தனது தந்தைக்கு ஏக வாரிசு எனவும் அதே போன்று அவருடைய தந்தையும் ஏக வாரிசு எனவும் மேலும் செல்லையா ரங்கநாதன் 1983.05.27 ஆந் திகதி குடல் இறக்க நோய் காரணமாக இறந்துவிட்டார் எனவும் அதன் ஆட்சி உரிமத்தினை கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தினால் வழக்கு இல. 1471/T மூலம் நிர்வகிக்கப்பட்டு ரங்கநாதனின் மனைவியாகிய வள்ளிநாயகி ரங்கநாதன் 1991.09.05 ஆந்திகதி ஆட்சி உரிமம் வழங்கப்பட்டது எனவும் மேலும் வள்ளிநாயகி 09.04.1995ஆந்திகதி அவரும் காலமானதாகவும் 22.06.1998இல் ரங்கநாதன் சிறிநிவாசகத்திற்கு ஆட்சி உரிமம் வந்தடைந்ததாகவும் வெளிப்படுத்தியுள்ளார். ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக வழக்குப் பிரதிகள் எவையும் சமர்ப்பிக்கவில்லை.

**ஆதன விபரம் -1**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று வலிகாமம் வடக்கு பிரதேச செயலர். பிரிவு J/220 அளவெட்டி மேற்கு கிராமசேவகர் பிரிவு. வலிகாமம் வடக்குப் பிரதேசசபை அளவெட்டி இறை "சாமந்தியன்கடல்" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T. தங்கராசா அவர்களால் 21.01.2003 ஆந் திகதி 2278 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தின் படி பாகம் ஒன்று எனப்படும் நிலப்பரப்பு ஏழு குழி பூச்சியம் தசம் மூன்று (நிலப்பரப்பு 07 குழி 0.30) இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V. மகேந்திரன் அவர்களால் 25.03.2011 ஆந் திகதி 930 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தின் படி பாகம் ஒன்று எனப்படும் நிலப்பரப்பு ஏழு குழி பூச்சியம் தசம் இரண்டு நான்கு உம் (நில.பர 7 குழி 0.24) இதில் தெற்குப்புறமாக அறுதி விற்ற நிலப்பரப்பு மூன்று நீக்கி மிகுதிக்கு நிலப்பரப்பு நான்கு குழி பூச்சியம் இரண்டு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A. கந்தசாமி அவர்களால் 12.06.2015 ஆந் திகதி 2015/219 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தின் படி நிலப்பரப்பு நான்கு குழி பூச்சியம் ஒன்று தசம் ஒன்று ஆறு (நிலப்பரப்பு 4 குழி 01.16) இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A. கந்தசாமி அவர்களால் 28.02.2016 ஆந் திகதி 2016/04/35 ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் முதலாம். இரண்டாம். மூன்றாம் நம்பர் துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் மூன்றாம் நம்பர் துண்டாகில் குழி 01.10 நிலம் அதற்கு வடக்கே உள்ள பாதையுடன் பொதுப்பாவிப்புக்காக இணைக்கப்பட்டது. இதில் 2016/04/35 ஆம் இலக்கப்படத்தில் இரண்டாம் நம்பர் துண்டுக்கு குறித்த நிலஅளவையாளர் அவர்களால் 28.02.2016 ஆந் திகதி 2016/04/35/01 ஆம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் பாகம் ஒன்று எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் விசாலம் நிலப்பரப்பு இரண்டு (நிலப்பரப்பு 2)
இதற்கு எல்லைகள் வருமாறு
கிழக்கு :- வீதி
வடக்கு :- பாதை
மேற்கு :- வல்லிபுரம் குகனேஸ்வரனுக்கும் பெண் யசோதாவின் ஆதனம்
தெற்கு :- நாகராசா ரதீஸ்குமார் பெண் சுஜாதா ஆதனம்

ஆதன விபரம் - 2

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று. அளவெட்டி இறை "சாமத்தியன் கடல்" அல்லது "சாமத்தியன்கூடல்" நிலப்பரப்பு 7 குளி 02.4 இதில் தெற்காக அறுதி விற்ற நிலப்பரப்பு 3 நீக்கி மிகுதி 4 குளி 02 இது உத்தரவு பெற்ற அளவையாளர் ஏ. கந்தசாமி அவர்களால் 2015.06.12ம் திகதி 2015/219ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தின் படி நில.பர.4 குளி 01.16 இது உத்தரவு பெற்ற அளவையாளர் V. கந்தசாமி அவர்கள் 28.02.2016ம் திகதிய 2016/4/35ம் இலக்கபடத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1, 2, 3 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே துண்டு 1 அறுதி விற்றது (விண்ணப்பதாரராகிய பாலச்சந்திரன் சுரேஸ் வாங்கியுள்ளார்) போகவும் துண்டு 3 எனும் பாகமான விஸ்தீரணம் குளி 1.10 பாதைக்காக மழைதாக விடப்பட்டதும் போக மிகுதியான இதில் துண்டு 2 எனும் பாகம் விஸ்தீரணம் நில. பர. (2) இரண்டு குளி (00.06) சைபர் சைபர் தசம் சைபர் ஆறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்
இதன் எல்லை :-
கிழக்கு - கொள்வனவுக்காரரின் ஆதனம்
வடக்கு - பாதை நிலமும் சின்னத்தம்பர் மயில்வாகனத்துக்குரிய ஆதனமும்
மேற்கு - சிதம்பரம் கோவிலாதனம்
தெற்கு - நாகராசா ரதீஸ்குமார் பெண் சுஜாதாவுக்குரிய ஆதனம் இதடங்கலும்

மேற்குறித்த ஆதனங்களை பாலச்சந்திரன் சுரேஸ் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பாலச்சந்திரன் சுரேஸ் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகன் தேவை**
யாழ். இந்து (V) 1981 பூராடம்
விவாகரத்தான மணமகளுக்கு
மணமகன் தேவை.
(10 இல் சூரியன் செவ்வாய்)
(CS/431351) J-1
தொடர்பு:- 077 964 9245

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்ப்பாணம் கந்தர்மடம், நல்லூரடி. யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் மூவர் அடங்கிய சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 275 6242

**வேலையாட்கள் தேவை**
182 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள Abans - A
காட்சியறைக்கு Office Assistant
(ஆண்கள்) தேவை.
30 வயதிற்குட்பட்டவர்கள். 5Km இற்குள்
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
(CS/560721) J-1
077 317 9593

**மணமகள் தேவை**
1997 இந்து. திருவோணம். SOFTWARE ENGINEER,
பூர்வீகம் - வேலணை, வதியுமிடம் - UK
மணமகன் பதிவு இல: 10920
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**
1985 இந்து, அவிட்டம், NURSE,
பூர்வீகம் - புங்குடுதீவு, வதியுமிடம் - FRANCE
மணமகள் பதிவு இல: 10640
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401

**வீடு விற்பனைக்கு**
யாழ். திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி,
அரசடி ஒழுங்கை, 2ம் ஒழுங்கை,
4 பரப்புக் காணியில் 4 அறைகள்,
2 சமையலறைகள்,
2 Electricity meter, 2 கிணறுகள் உள்ள
திருத்தியமைக்கப்பட்ட
பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
(CS/286491) J-1
தொடர்பு:- 077 776 0663

**அறிவித்தல்**



கிறிஸ்டியன் பேர்ட்டன் லெனார்ட்

மேற்படி நபர் தொடர்ந்தும் எமது
நிறுவனத்தில் சேவையில் இல்லை
என்பதுடன் அவர் உடனான
எந்தவொரு கொடுக்கல்
வாங்கலுக்கும் எமது நிறுவனம்
பொறுப்பேற்காது.

ஹேலிஸ் பென்டன்ஸ் லிமிட்டெட்
180, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10, இலங்கை.

# தமிழ்ப் பொதுவேட்பாளரின் தோல்வி தமிழினத்தின் தோல்வியாகவே அமையும்

## அரியநேந்திரன் கிளிநொச்சியில் எடுத்துரைப்பு

கிளிநொச்சி, செப். 1

**தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடும் என்னைத் தோற்கடிப்பது தமிழினத்தையே தோற்கடிப்பதாக அமையும் என தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.**

'பொலிகண்டி முதல் பொத்துவில் வரை' முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை பயணத்தின் தொடர்ச்சியாக கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் முன்னெடுத்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப் பொதுவேட்பாளரை பல தமிழ்க் கட்சிகள் ஆதரிக்கின்றன. சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையற்ற முயற்சி எனவும் தோற்கடிக்கப்படவேண்டும் எனவும் கூறி வருகின்றனர். உண்மையில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் என்னைத் தோற்கடிப்பது என்பது எமது இனத்தையே தோற்கடிப்பதற்கு சமனாகும் என்பதனை மக்கள் அனைவரும்புரிந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை உதாசீனப்படுத்தி வரும் ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வழங்கும் பரிசாகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் அமைந்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்திய பின்னர் தென்னிலங்கையில் பெரும் அலையாக தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புடன் பேச்சு நடத்த தொடர்ந்தும் பல தரப்பில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்ப் பொதுவேட்பாளர் ஏற்படுத்தியுள்ள அச்சம் காரணமாக அவர்களை பீடித்திருக்கின்ற காய்ச்சலாலேயே இவ்வாறு மாறி மாறி பேச்சுக்கு அழைப்புவிடுத்து வருகின்றனர்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் நாங்கள் மூன்றரை ஜனாதிபதிகளை கண்டிருக்கின்றோம். மூன்றரை ஜனாதிபதிகளுடனும் பேசியிருக்கின்றோம். எல்லோருமே எம்மை ஏமாற்றியிருக்கின்றார்கள். தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை என்பது உண்மை. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் அரசியல் தீர்வை விரும்பவில்லை, அபிவிருத்தியைத்தான் விரும்புகின்றார்கள் என்ற செய்தியை இராஜதந்திரிகளிடம் கூறிவருகின்றது.

தமிழ்மக்களாகிய நாங்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல. அதேநேரத்தில் தமிழர்களது அபிலாஷைகள் மிக முக்கியமாகும். அபிலாஷைகளின் அடிப்படையில் உரிமைகளுக்காகத்தான் பல தியாகங்களை செய்திருக்கின்றோம். அந்தத் தியாகங்களுக்கான விடை எங்களுக்கு கிடைக்கவில்லை. அதனை நாங்கள் பெறவேண்டுமானால் நாங்கள் இன்றும் உறுதியுடன் இருக்கின்றோம் என்பதனை வெளிக்காட்டுவதற்காக ஜனநாயக ரீதியான போராட்ட வடிவமாகவே தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் களத்தை கையிலெடுத்திருக்கின்றோம் - என்றார். (ஒ-100)



## பொதுவேட்பாளருக்கு முல்லையில் வரவேற்பு!

முல்லைத்தீவு, செப்.1

பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரை முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை நடவடிக்கைகள் முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரனுக்கு முல்லைத்தீவு மக்களால் தமிழர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு வழங்கப்பட்டது. (ஒ-25, 20. 100)



## 'இயலும் ஸ்ரீலங்கா' அலுவலகம் யாழில்

யாழ்ப்பாணம், செப். 1

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் "இயலும் ஸ்ரீலங்கா" யாழ்.மாவட்டத் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் காங்கேசன்துறை வீதி, தாவடியில் நேற்றுச் சனிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் 11 தேர்தல் தொகுதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் நடவடிக்கைகளைக் குறித்த அலுவலகத்தில் மேற்கொள்ளளப்படவுள்ளது. (ஒ-25,66,20,27)

## வர்த்தகச்சந்தை நாளை வரை

யாழ்ப்பாணம், செப். 1

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாணத் தொழிற்றுறைத் திணைக்களம், யாழ்.மாவட்டச் சிறுதொழில் முயற்சியாளர் சங்கம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் யாழ்.மாநகரசபையின் ஒத்துழைப்புடன் வர்த்தக சந்தை நிகழ்வு, நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் நல்லூர்க் கந்தன் ஆலயத் தீர்த்தத் திருவிழா நாளான நாளை திங்கட்கிழமை வரையிலும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை குறித்த வர்த்தக சந்தை நிகழ்வு இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், ஆடை வகைகள், பாடசாலைப் பைகள், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், சத்துமா வகைகள், உள்ளூர் சவர்க்கார வகைகள், பூங்கன்றுகள் போன்ற பல்வேறு பொருட்களும் குறித்த வர்த்தக சந்தையில் இடம்பெற்றுள்ளன. (ஒ-25,66)



## இலங்கையைச் சுற்றிய இளைஞனை சந்தித்த சஜித்

கொழும்பு, செப். 1

சஹ்மி ஷஹீத் என்ற இளைஞர் ஒருவர் சமாதானத்தின் தூதை ஏந்தி சுமார் ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூரம் நடைபவனியாக நாட்டைச் சுற்றி வந்துள்ளார். இலங்கையின் கரையோரப் பாதைகளிலான நடைபயணத்தை 45 நாட்களில் நிறைவு செய்த அவர், தனது இலக்கை பேருவளை நகரில் அண்மையில் நிறைவு செய்தார். தனது பயணத்தை முடித்துக் கொண்டதன் பிற்பாடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்துள்ளார். (ஒ-25)

## பழைய மாணவர்களால் கதிரைகள் அன்பளிப்பு!

கிளிநொச்சி ,செப். 1

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரிக்கு பிரான்ஸ் நாட்டிலுள்ள பழைய மாணவர் ஒன்றியத்தால் 216 கதிரைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ஒ-22,13)

## பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம், செப். 1

வீட்டில் யாரும் இல்லாத வேளை இனந்தெரியாத நபர் ஒருவர் வீடு புகுந்து பணத்தைத் திருடிக் கொண்டு தப்பித்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில், சி.சி.ரி.வி. பதிவுடன் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நபர் ஒருவர் வீட்டுக்குள் நுழையும் போது ஒரு உடையுடனும் திருடிய பின்னர் வெளியேறும் போது வேறு உடையை மாற்றிச் செல்வதும் பதிவாகியுள்ளது. சி.சி.ரி.வி. காணொலியில் பதிவாகியுள்ள நபர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், 0718 591337 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தகவல் வழங்குமாறும் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-20,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச்சீட்டுக்கு வரிசையுகம்: இவரா நாட்டை மீட்பார்?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

**கொழும்பு, செப். 1**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் ரணிலுக்கு முறையாக கடவுச்சீட்டுகளையே வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. கடவுச்சீட்டுகளை வழங்கமுடியாத இந்த ஜனாதிபதி நாட்டையும் கிராமத்தையும் முன்னேற்றுவார் என்று நம்பிக்கை கொள்ளமுடியாது -இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நிக்கவெரட்டிய நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வறுமையை ஒழிப்பது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. அரசாங்கத்தின் தரமற்ற கொள்கைகள் காரணமாக பெரும்பான்மையானோர் வறுமையில் சிக்கியிருக்கின்றார்கள். மக்களை ஓரங்கட்டி செல்வந்தர்களை பாதுகாக்கின்ற அரசாங்கமாக மாறியிருக்கின்றது. இந்த அரசாங்கத்தால் விவசாயிகளின் விவசாய கடனை இரத்துச் செய்ய முடியாவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக விவசாய கடனை இரத்துச் செய்வோம்.

அரச வங்கிகளுக்கு கடனை செலுத்தாதவர்களின் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதியிடமும் நிதி அமைச்சரிடமும் கோரியிருந்த போதும், அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. நட்புறவுகள் காரணமாக கோடிக்கணக்கான பணத்தை மீளப் பெறாது இரத்துச் செய்து இருக்கின்றார்கள். மிகப்பெரிய செல்வந்தர்களின் கடனை இரத்துச் செய்ய முடியும் என்றால், விவசாயிகளின் கடனையும் இரத்துச் செய்ய முடியும். ஐக்கிய மக்கள் சக்தி செல்வந்தர்களை பாதுகாப்பதில்லை. கீழ் மட்ட பொதுமக்களை பாதுகாப்பதற்காகவே எமது கட்சி அரசியலை முன்னெடுத்து வருகிறது. நெல்லுக்கான நிர்ணய விலையை வழங்குவதோடு நாடு, சம்பா, கீரிச் சம்பா, கெகுளு போன்ற அரிசிகளுக்கு அதிகரித்த விலை காணப்பட்டாலும், விவசாயிகளுக்கு குறைந்த தொகைவிலையே கிடைக்கின்றது. நுகர்வோரிட மிருந்து அதிக தொகை பெறப்படுவதனால் ஊழல் இடம்பெறுவதோடு மாபியாவும் உருவாகின்றது.

அரிசி மாபியாவை நிறுத்தி விவசாய மக்களை பாதுகாக்கின்ற யுகத்தை உருவாக்குவோம் - என்றார். (ஒ-இ)

முல்லை மாவட்டத்துக்கான

# 'நமக்காக நாம்' பரப்புரை இன்றுடன் நிறைவு

முல்லைத்தீவு, செப்.1

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரனின் முல்லைத்தீவுக்கான 'நமக்காக நாம்' பரப்புரைப் பயணம் மூன்றாவது நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு நகரில் ஆரம்பித்து உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் ஊடாகப் பயணித்து மீண்டும் புதுக்குடியிருப்பு நகரை வந்தடைய உள்ளது. அதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளின் உரைகளைத் தொடர்ந்து தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்துக்கான 'நமக்காக நாம்' முதல்கட்ட தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன. (ஒ-25, 100)

# பவள விழாவும், நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், செப்.1

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் பவள விழாவும், அறம் பாலிக்கும் ஞான மோகனம் நூல் வெளியீடும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வரின் ஆன்மீகம், சமூகப் பணிகளை விதந்து குறிப்பிடும் வகையிலான 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' எனும் நூல் வெளியீடு செய்யப்பட்டதுடன், இறுவட்டும் வெளியிடப்பட்டது. (ஒ-ரி-66)

# அமரர் தர்மலிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.1

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் 39 ஆம் ஆண்டு நினைவஞ்சலிநிகழ்வு வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் றிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப்பேருரையையும், அன்னாரின் புதல்வர் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நன்றியுரையையும் ஆற்றுவர்.

அதேவேளை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்றலில் அமைந்துள்ள அன்னாரின் சிலைக்கு மு.ப. 10.30 மணிக்கும், வலி.தெற்கு பிரதேச சபை முன்றலிலுள்ள சிலைக்கு மு.ப. 11.30 மணிக்கும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள சிலைக்கு பி.ப. 4 மணிக்குமாக மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும். (ஒ-25)





# நல்லூரான் வீதியில் மணற் சிற்பங்கள்

யாழ்ப்பாணம், செப்.1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருவிழா இடம்பெற்று வரும் நிலையில் கொடி ஏற்ற நாள் முதல் தினசரி உற்சவங்களுக்கு ஏற்ற வகையில் ஆலய முன்றலில் மணல் சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன.

வேலணை பகுதியைச் சேர்ந்த மணல்சிற்ப கலைஞரான சுகுமார் என்பவர் தினமும் அதிகாலை வருகை தந்து ஆலய கோபுரத்துக்கு முன்பாக இந்த மணல் சிற்பங்களை செய்துவருகின்றார். மணல் சிற்பங்கள் பக்தர்களிடையே பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. (ஒ-25, 100)

# நல்லூர் பட்டிப்பொங்கல்!



யாழ்ப்பாணம், செப்.1

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழாவின் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை சந்தானகோபாலர் உற்சவத்தின் போது ஆலயத்தின் வடக்கு இராஜகோபுரப் பகுதியில் பட்டிப்பொங்கல் இடம்பெற்றிருந்தது. நல்லூர் ஆலய வரலாற்றில் முதன் முறையாக இவ்வாறு பட்டிப் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லண்டனிலும் போராட்டம்

லண்டன், செப். 1

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளான நேற்றுமுன்தினம் அரச படைகளாலும், அரச படைகளுடன் இணைந்து செயற்பட்ட குழுக்களாலும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்த்தேசிய உறவுகளை நினைவேந்தியும் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி வேண்டி ஆர்ப்பாட்டமும், நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் லண்டன் திரா பல்கர் சதுக்கத்தில் போராட்டமும் பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான மனு அளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரிட்டன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழைப்பில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் லண்டன் வாழ் தமிழ் இளைஞர்கள் மற்றும் குறிப்பாக தமிழ் யுவதிகளும் பெருமளவில் கலந்து கொண்டு ஆதரவை வழங்கினர். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

முகமாலை A9 Road க்கு அருகில் 30 ஏக்கர் வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 920 5368**

## ஆரம்ப கால திருமண சேவை

